# சோதிடமலர்

# SOTHIDA MALAR




உள்ளே............

- கோள்களும் கால அளவுகளும்
- எண் சோதிடமும், அதன் உண்மைகளும்.
- வாழ்க்கையில் சோதிடம்
- நாள் எப்படி?
- வானியற் காட்சிகள்

இன்னும் பல

க்ஷய ௵ பங்குனி ௴

(15-3-87—13-4-87)

விலை ரூபா 3-00



உ


# சோதிடமலர்

SOTHIDA MALAR

❋

ஆசிரியர்:

**பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா**

(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

க்ஷய ஞூ பங்குனி மீ

**( 15 - 3 - 87 )**

மலர் 9 | இதழ் 12


நமஸ்தே சரண்யே சிவேசானுகம்பே
நமஸ்தே ஜகத்வ்யாபிகே விஸ்வரூபே |
நமஸ்தே ஜகத்வந்ய பாதாரவிந்தே
நமஸ்தே ஜகத்தாரிணித் ராஹிதுர்க்கே | |

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானுர்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே.

மனதைச் சுத்தம் செய்யத் தியானமும், அறிவைச் சுத்தம் செய்ய தத்துவ ஆராய்ச்சியும் முக்கியமாகும். அதுபோல சரீர சுத்திக்கும் நற்கருமங்கள் சில செய்ய வேண்டும் மனதில் உள்ள கருணையால் பிரதிபலிக்கும் வண்ணம் செய்யப்படும் தானம் ஆலய சேவை முதலியன சரீரகருமங்களாகும். இக்கருமங்களால் மனதில் உள்ள அகங்காரம் சிறிதுசிறிதாக கரைந்து விடுகிறது. பாதையில் உள்ள முள், கல் முதலிய துன்பந் தரும் பொருட்களை நீக்கிவிடுதல் சரீர நற்கருமங்களாகும். இவ்விதம் செய்யும்போது ஒரே சமயத்தில் மனச் சுத்தியும், சரீர சுத்தியும் உண்டாகின்றது ஊருணி நீர்நிறைந்தாற் போல நீர் நிலையுண்டாக்குதல், ஓய்வு நேரங்களில் மன உற்சாகத்துடன் பகவத் பிரார்த்தனை செய்தல் இவைகள் கூட சரீர நற்கருமங்களாகின்றன. முடிவில் இவையெல்லாம் ஈஸ்வர கருமங்களாகி ஆத்ம திருப்தியைத் தருகின்றன.

## பங்குனித் திங்கள்

கார்த்திகைத் திங்கள் ''சோமவாரம்'' என சிவனுக்கு விசேடமாதல் போல பங்குனிமாதத் திங்கள் கிழமைகளும் சக்திவழிபாட்டுக்கு அதுவும் கற்பிற் சிறந்தவளும் வீரபத்தினியுமான கண்ணகிதேவியின பொங்கல் பூசைகட்கு உரித்துடையதாகின்றது. வீரபத்தினியாகத் தோன்றிய கண்ணகியம்பாள் வடிவுடன், திருச்செங்குன்று எனும் மலைமீது தேவலோகவியானம் கீழிறங்க அதன் மீது தெய்வத் திருக்கோலத்துடன அமர்ந்து விண்ணுலகடைந்தாள் என சிலப்பதிகாரம் கூறுகின்றது. இத்தெய்வீகத் திருவுருவுக்கு வழிபாடாக பொங்கல், நீர்க்கஞ்சி போன்ற குளிர்ச்சியூட்டும் நிவேதன வகைகளே உரியதாக; இன்றும் இந்துக்கள் இக்காலங்களின் பொங்கல் வழிபாட்டையே மேற்கொண்டு வருகின்றனர்.

## பங்குனி உத்தரம்

பலிவிழாப்பாடல் செய் பங்குனி உத்தர நன்னாள் சூரியன் மீனராசியில் நிற்க சந்திரன் உத்தர நட்சத்திரத்துடன் கன்னிராசியில் நின்று தன் பூரண கிரணங்களை பூவுலகத்தவர்க்கு அளிக்கும் புண்ணியநாளாக விளங்குகிறது. மேலும் பார்வதி சமேதராகிய சிவபெருமானை மணக்கோலத்துடன் தர்சித்து வழிபடுவதால் திருமணவிரதமென்றும் இந்நாள் விதந்து கூறப்படுகிறது. இவ்வுத்தர நன்னாளில் இறைவன் இறைவியரது உருவங்களை பொன் முதலிய லோகங்களால் செய்வித்து அவற்றிற்கு அபிசேக ஆராதனைகள்புரிந்து மறுநாள் பிராமணத் தம்பதியர் இருவரை அழைத்து வஸ்திரம் முதலிய உபசாரங்கள் கொடுத்து வழிபட்டுபின் முதனாட் பூஜித்த உருவங்களை அவர்களிடம் தானமாகக் கொடுத்து அவராசிபெற்று சிவனடியாருடன்போஜனஞ்செய்து இவ்விரதம் அனுட்டிக்கவேண்டும். இவ்விரதத்தை அனுட்டித்து சரஸ்வதி, இந்திராணி ஆகியோர் போல தாம்விரும்பியவாறு முறையே விஷ்ணுவிடமும், இந்திரனிடமும் நற்பதவிகளைப்பெற்றதாகவும், சந்திரன் அழகுவாய்ந்த இருபத்தியேழு கன்னியரை மனைவியாகப் பெற்றான் எனவும் புராணக்கதைகள் விரதமகிமையை வெளியிடுகின்றன. எனவே மணப்பருவமடைந்த கன்னியரும் தாம் விரும்பியவரை அடைவதற்கு இவ்விரதம் சிறந்தது என்பதைக் கருத்திற்கொண்டு அனுட்டித்து நற்பலன்களைப் பெறுவார்களாக.

# நாள் எப்படி?

பங் 1 ஞாயி (15-3 87) பூரணை மாலை 6-43 வரை, பூரம் பகல் 11-07 வரை, சித்தாமிர்தம், பூரணை விரதம், சுபகருமங்கட்கு நன்று. ராகு 4 51 –6 21

பங் 2 திங் (16-3 87) பிரதமை மாலை 6-42 வரை உத்தரம் பகல் 11-51 வரை. சித்தம், சுபகருமங்கள் செய்யலாம். ராகு 7 51 — 9 21

பங் 3 செவ் (17-3-87) துவிதியை மாலை 6-16வரை அத்தம் பகல் 12-10 வரை. சித்தம். வயற்செய்கைகட்கு நன்று. ராகு 3-21 – 4 51

பங் 4 புத (18 3 7) திரிதியை மாலை 5-25வரை, சித்திரை பகல் 12-04 வரை, அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 12-20—1-50

பங் 5 வியா (19 3 87) சதுர்த்தி மாலை 4-18வரை சுவாதி பகல் 11-37 வரை, அமிர்தசித்தம், நற்கருமங்களை மேற்கொள்ளலாம். ராகு1-49—3-19

பங் 6 வெள் (20 3-87) பஞ்சமி பகல் 2-42வரை, விசாகம் பகல் 10-52வரை, சித்தம், சரிநாள், அவசர கருமங்கள் செய்யலாம். ராகு 10 49—12-19

பங் 7 சனி (21-3-87) ஷஷ்டி பகல் 12-56 வரை, அனுஷம் காலை 9-50 வரை, சித்தம், முக்கியகருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 9-18—10-48

பங் 8 ஞாயி (22 3-87) ஸப்தமி பகல் 10-56 வரை கேட்டை-மரணம் காலை 8-35 வரை, அசுபதினம், ராகு 4-48—6-18

பங் 9 திங் (23-3-87) அஷ்டமி காலை 8-46 வரை, மூலம்-சித்தம் காலை 7-10வரை, பூராடம் பி.இ. 5-36 வரை, சுபதினமல்ல. ராகு 7-47 –9-17

பங் 10 செவ் (24-3-87) நவமி காலை 6-28 வரை, தசமி பி.இ. 4-06 வரை, உத்தராடம்-மரணம் பி இ 3-58வரை, சுபதினமன்று. ராகு3-16-4-46

பங் 11 புத (25-3-87) ஏகாதசி பி.இ. 1-44 வரை, திருவோணம்-சித்தம் பி.இ. 2-32 வரை, ஸர்வ ஏகாதசிவிரதம் நற்கருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 12-16—1-46

பங் 12 வியா (26-3-87) துவாதசி இரவு11-30வரை அவிட்டம்-சித்தம் பி.இ. 12-57 வரை, சுபதினம். ராகு 1-45—3-15

பங் 13 வெள் (27-3-87) திரயோதசி இரவு 926வே. சதயம் இரவு 11-32 வரை, சித்தம், பிரதோஷ விரதம், சுபகருமங்கட்கு நன்று. ராகு 10-44 – 12-14

பங் 14 சனி (28 3 87) சதுர்த்தி மாலை 7-39வரை பூரட்டாதி-மரணம் இரவு 10 30 வரை, சுபதினமன்று. ராகு 9-14—10-44

பங் 15 ஞாயி (29 3 87) அமாவாசை மாலை 6-16 வரை, உத்தரட்டாதி இரவு 9-53 வரை, அமிர்தம், அமாவாசை விரதம், அசுபதினம். ராகு 4-44—6-14

பங் 16 திங் (30-3 87) பிரதமை மாலை 5-22வரை, ரேவதி இரவு 9-45 வரை, சித்தம், சுபதினம். ராகு 7-43 9-13

பங் 17 செவ் (31-3 87) துவிதியை மாலை5-02வரை அசுவினி இரவு 10 12 வரை, அமிர்தசித்தம், அசுபதினம். ராகு 3-13 –4-43

பங் 18 புத (1-4 87) திரிதியை மாலை 5-20 வரை, பரணி இரவு 11 15 வரை, சித்தாமிர்தம், அசுபதினம். ராகு 12-12 —1-42

பங் 19 வியா (2 4 87) சதுர்த்தி மாலை 6-16வரை, கார்த்திகை பி.இ. 12-55 வரை, மரணம், கார்த்திகை விரதம், சதுர்த்தி விரதம், சரிநாள், அசுபதினம். ராகு 1-41– 3-11

பங் 20 வெ (3-4-87) பஞ்சமி இரவு 7-46 வரை, ரோகிணி – மரணம் பி.இ. 8-07 வரை, சுபதினமன்று. ராகு 10 40 — 12-10

பங் 21 சனி (4 4 87) ஷஷ்டி இரவு 9-46 வரை, மிருகசீரிடம் பி.இ. 5-47 வரை, சித்தம், ஷஷ்டி விரதம், சுபகருமங்கள் செய்யலாம். ராகு 9-10—10-40

பங் 22 ஞாயி (5 4-87) ஸப்தமி பி.இ. 12-5வரை திருவாதிரை முழுவதும், சித்தம், சுபகருமங்கள் செய்யலாம். ராகு 4-39 – 6 09

பங் 23 திங் (6-4-87) அஷ்டமி பி.இ. 2-30 வரை திருவாதிரை காலை 8-38 வரை. சித்தாமிர்தம், அசுபதினம். ராகு 7-38 — 9-08

பங் 24 செவ் (7 4 87) நவமி-சித்தம் பி இ 4-49வ. புனர்பூசம் பகல் 11-33 வரை. ஸ்ரீராமநவமி, அசுபதினம். ராகு 3 08 – 4-38

பங் 25 புத (8-4-87) தசமி முழுவதும், பூசம் பகல் 2-17 வரை, சித்தம், நற்கருமங்கள் செய்யலாம். ராகு 12-07—1-37

பங் 26 வியா (9 4-87) தசமி காலை 6-48 வரை, ஆயிலியம் மாலை 4-39 வரை சித்தாமிர்தம் அசுப தினம். ராகு 1 37—3 07

பங் 27 வெள் (10 4-87) ஏகாதசி காலை 8 18 வரை மகம்-மரணம் மாலை 6 29 வரை ஸர்வஏகாதசி விரதம், அசுபதினம். ராகு 10 36 12-06

பங் 28 சனி (11-4-87) துவாதசி காலை 9-10 வரை பூரம்-சித்தம மாலை 7-43 வரை, சனிப்பிரதோச விரதம், சுபதினமன்று. ராகு 9-06 10-36

பங் 29 ஞாயி (12 4-87) திரயோதசி காலை 9-24 வரை, உத்தரம இரவு 8-19 வரை, அமிர்தசித்தம், பங்குனி உத்தரம், முக்கியகருமங்கள் செய்யலாம். ராகு 4-36—6-06

பங் 30 திங் (13-4-87) சதுர்த்தி காலை 9-00 வரை அத்தப-சித்தம் இரவு 8-10 வரை, பூரணை விரதம் அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 7 36—9-06

---

ஓர் அறிமுகம்

## சைவ விரதங்கள்

சைவ விரதங்களின் வாழ்க்கையில் விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள் என்பவை மரபு வழியாகவும், பழமை காரணமாகவும் பின பற்றப்பட்டு வருகின்றன. ஆனல் விரதங்கள் ஆன்மீகச் சிறப்பிற்காக ஒழுங்கு முறைகள், நியமங்கள் என்பன அடங்கியனவாக உள்ளன. இம் முறைகள் எவை, நியமங்கள் எப்படிப்பட்டவை என்பவற்றை ஆரம்ப அறிமுகமாக விரதங்களும், விழாக்களும் என்னும் நூலிற்கு முன்னுரை போன்று கை அடக்கமாக அறிமுகப் படுத்தியுள்ள நூல் இதுவாகும். கோபபாய் சிவம் அவர்களின் இலக்கிய ஆர்வத்துடன் அண்மையில் வெளிவந்த சைவாலயக் கிரியைகள் போன்று துணிவுடன் வெளியிடப்படும் சிறுநூல் என்றே சொல்லலாம். விரதவிளக்கம் பலன்கள் முதலியன பின்வரும நூலுக்கு முன்னேடியாக மிளிர்கின்றன. சைவ மக்கள் வாங்கிப் பயனடைய வேண்டிய சிறு பொக்கிஷம் என்ற கூறலாம். விலையும் கையடக்கமாக ரூ 7/ மட்டுமே.

விபரங்கட்கு; ப. சிவானந்தசர்மா
சிவன்கோவிலடி,
ஆவரங்கால், புத்தூர்.

# சோதிடம் என்பது ஓர் சிறந்த கணிதம்:

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.' என்பது சான்ருேர் வாக்கு. அந்த எண்களைக் கொண்டே எமது வாழ்க்கை நாம் பிறக்கும் போது கணித்தபடி நடைபெறுகிறது.

ஒரு குழந்தை பிறந்த நேரம் சரியாக எடுக்கப்பட்டு பலன் கூறுமிடத்து பலன்கள் சரியாகவே வருகின்றன. என்பதைக் கண்கூடாகக் காண்கிருேம். ஜோதிடம் என்பது ஜோதிடன் தன் வருமானத்திற்காக கற்பனையில் கதை அளப்பது என்று எண்ணுவது தவறு. விஞ்ஞானிகள் இயந்திர நுணுக்கங்களை அறிந்து செல்படுவது போல் இயந்திரத்தின் எந்தப் பகுதி பழுதடைந்தால் என்ன பிழை எங்கு ஏற்படும் என்று கூற முடிவதைப் போன்று வைத்தியர் நோய்க்குரிய அறிகுறிகளைக் கொண்டு நோயைக் கண்டுபிடிப்பதைப் போன்று, ஒரு கணிதத்தை சரியாகச் செய்துமுடிக்கும்போது விடை கிடைப்பது போல சோதிடத்திலும் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை நடைபெறப்போவதை நேரசூசிகையில் எழுதிவைத்தல் போன்று நடைபெறுகின்றது.

மனிதன் செய்யும் கணிப்புக்களின் பெறுபேறுகள் மாறலாம். தவறுகள் ஏற்படலாம். ஆனல் ஜோதிடக் கணிப்பின்படி நடைபெறுவதில் தவறுகள் ஏற்படுவதில்லை.

சோதிடத்தில் நம்பிக்கை வைக்காது சோதிடர்களிடம் செல்வாது இருப்பவர்களுக்கு காரியங்கள் சரியாக நடைபெறுகின்றது என்பது உண்மை. ஆனல் அவைகூட அவர்கள் பிறந்த நேரத்தின்படி அந்த நேரத்தில் நடைபெறக் கணித்தபடியேதான் நடைபெறுகின்றன. சோதிடர்களின் ஆலோசனையின் பேரில் நடப்பவர்கட்கேற்படும் தீமைகளை அவதானத்துடன் நடப்பதால் சற்றுக் குறைந்து காணப்படலாம் அன்றேல் அவர்களை ஜாதகத்தில் பூர்வபுண்ணியஸ்தானமும், குருபகவானும் பலத்துடன் இருப்பாராஞல் கிரக சாந்திமூலம் பரிகாரம் தேடுவதால் தாமதமாகிய பின்பாவது காரியங்கள் சித்தியடையலாம். பூர்வபுண்ணியஸ்தானமும், குருபகவானும் பலவீனமானவர்கள் கிரகசாந்திமூலம் மன அமைதியையாவது பெறலாம். — 'வாசவி'

# உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

## க்ஷய ஷு பங்குனி மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (15-3-87 முதல் 13-4-87 வரை)

| இங் மார்ச் | தமி பங் | வாரம் | மீனம் ம.மி. முதல் (காலை) | மீனம் ம.மி. வரை (காலை) | மேடம் ம. மி. வரை (காலை) | இடபம் ம. மி. வரை (பகல்) | மிதுன ம. மி. வரை (பகல்) | கடகம் ம. மி. வரை (பி.ப) | சிங்கம் ம. மி. வரை (மாலை) | கன்னி ம. மி. வரை (இரவு) | துலா ம. மி. வரை (இரவு) | விருச்ச ம. மி. வரை (இரவு) | தனுசு ம. மி. வரை (பி.இ) | மகரம் ம. மி. வரை (பி.இ) | கும்பம் ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | ஞாயி | 6 22 | 8 3 | 9 53 | 11 55 | 2 6 | 4 14 | 6 15 | 8 14 | 10 18 | 12 28 | 2 36 | 4 32 | 6 17 |
| 16 | 2 | திங் | 6 17 | 7 59 | 9 49 | 11 51 | 2 2 | 4 10 | 6 11 | 8 10 | 10 14 | 12 24 | 2 32 | 4 28 | 6 13 |
| 17 | 3 | செவ் | 6 14 | 7 55 | 9 45 | 11 47 | 1 58 | 4 6 | 6 7 | 8 6 | 10 10 | 12 20 | 2 28 | 4 24 | 6 9 |
| 18 | 4 | புதன் | 6 10 | 7 51 | 9 41 | 11 43 | 1 54 | 4 2 | 6 3 | 8 [illegible] | 10 6 | 12 16 | 2 24 | 4 20 | 6 5 |
| 19 | 5 | வியா | 6 6 | 7 48 | 9 38 | 11 40 | 1 51 | 3 59 | 5 59 | 7 59 | 10 3 | 12 13 | 2 21 | 4 17 | 6 2 |
| 20 | 6 | வெள் | 6 3 | 7 45 | 9 35 | 11 37 | 1 48 | 3 56 | 5 56 | 7 56 | 10 0 | 12 10 | 2 18 | 4 14 | 5 59 |
| 21 | 7 | சனி | 6 0 | 7 40 | 9 30 | 11 32 | 1 43 | 3 51 | 5 51 | 7 51 | 9 55 | 12 5 | 2 13 | 4 9 | 5 54 |
| 22 | 8 | ஞாயி | 5 55 | 7 36 | 9 26 | 11 28 | 1 39 | 3 47 | 5 47 | 7 47 | 9 51 | 12 1 | 2 9 | 4 5 | 5 50 |
| 23 | 9 | திங் | 5 51 | 7 32 | 9 22 | 11 24 | 1 35 | 3 43 | 5 43 | 7 43 | 9 47 | 11 57 | 2 5 | 4 1 | 5 46 |
| 24 | 10 | செவ் | 5 47 | 7 28 | 9 18 | 11 20 | 1 31 | 3 39 | 5 39 | 7 39 | 9 43 | 11 53 | 2 1 | 3 57 | 5 42 |
| 25 | 11 | புதன் | 5 43 | 7 24 | 9 14 | 11 16 | 1 27 | 3 35 | 5 35 | 7 35 | 9 39 | 11 49 | 1 57 | 3 53 | 5 38 |
| 26 | 12 | வியா | 5 39 | 7 19 | 9 9 | 11 11 | 1 22 | 3 30 | 5 30 | 7 30 | 9 34 | 11 44 | 1 52 | 3 48 | 5 33 |
| 27 | 13 | வெள் | 5 34 | 7 15 | 9 5 | 11 7 | 1 18 | 3 26 | 5 26 | 7 26 | 9 30 | 11 40 | 1 48 | 3 44 | 5 29 |
| 28 | 14 | சனி | 5 30 | 7 12 | 9 2 | 11 4 | 1 15 | 3 23 | 5 23 | 7 23 | 9 27 | 11 37 | 1 45 | 3 41 | 5 26 |
| 29 | 15 | ஞாயி | 5 27 | 7 7 | 8 57 | 10 59 | 1 10 | 3 18 | 5 18 | 7 18 | 9 22 | 11 32 | 1 40 | 3 36 | 5 21 |
| 30 | 16 | திங் | 5 22 | 7 4 | 8 54 | 10 56 | 1 7 | 3 15 | 5 15 | 7 15 | 9 19 | 11 29 | 1 37 | 3 33 | 5 18 |
| 31 | 17 | செவ் | 5 19 | 7 0 | 8 50 | 10 52 | 1 3 | 3 11 | 5 11 | 7 11 | 9 15 | 11 25 | 1 33 | 3 29 | 5 14 |
| ஏப் 1 | 18 | புதன் | 5 15 | 6 55 | 8 45 | 10 47 | 12 58 | 3 6 | 5 6 | 7 6 | 9 10 | 11 20 | 1 28 | 3 24 | 5 9 |
| 2 | 19 | வியா | 5 10 | 6 52 | 8 42 | 10 44 | 12 55 | 3 3 | 5 3 | 7 3 | 9 7 | 11 17 | 1 25 | 3 21 | 5 6 |
| 3 | 20 | வெள் | 5 7 | 6 49 | 8 39 | 10 41 | 12 52 | 2 59 | 4 59 | 6 59 | 9 3 | 11 13 | 1 21 | 3 17 | 5 2 |
| 4 | 21 | சனி | 5 3 | 6 45 | 8 35 | 10 37 | 12 48 | 2 55 | 4 55 | 6 55 | 8 59 | 11 9 | 1 17 | 3 13 | 4 58 |
| 5 | 22 | ஞாயி | 4 59 | 6 41 | 8 31 | 10 33 | 12 44 | 2 51 | 4 51 | 6 51 | 8 55 | 10 5 | 1 13 | 3 9 | 4 54 |
| 6 | 23 | திங் | 4 55 | 6 37 | 8 27 | 10 29 | 12 40 | 2 47 | 4 47 | 6 47 | 8 51 | 10 1 | 1 9 | 3 5 | 4 50 |
| 7 | 24 | செவ் | 4 51 | 6 33 | 8 23 | 10 25 | 12 36 | 2 43 | 4 43 | 6 43 | 8 47 | 9 57 | 1 5 | 3 1 | 4 46 |
| 8 | 25 | புதன் | 4 47 | 6 29 | 8 19 | 10 21 | 12 32 | 2 39 | 4 39 | 6 39 | 8 43 | 9 53 | 1 1 | 2 57 | 4 42 |
| 9 | 26 | வியா | 4 43 | 6 25 | 8 15 | 10 17 | 12 28 | 2 35 | 4 35 | 6 35 | 8 39 | 9 49 | 12 57 | 2 53 | 4 38 |
| 10 | 27 | வெள் | 4 39 | 6 21 | 8 11 | 10 13 | 12 24 | 2 31 | 4 31 | 6 31 | 8 35 | 9 45 | 12 53 | 2 49 | 4 34 |
| 11 | 28 | சனி | 4 35 | 6 16 | 8 6 | 10 8 | 12 19 | 2 26 | 4 26 | 6 26 | 8 30 | 9 40 | 12 48 | 2 44 | 4 29 |
| 12 | 29 | ஞாயி | 4 31 | 6 13 | 8 3 | 10 5 | 12 16 | 2 23 | 4 23 | 6 23 | 8 27 | 9 37 | 12 45 | 2 41 | 4 26 |
| 13 | 30 | திங | 4 27 | 6 8 | 7 58 | 10 00 | 12 11 | 2 18 | 4 18 | 6 18 | 8 22 | 9 32 | 12 40 | 2 36 | 4 21 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: பங்குனி30 உ. (13-4-87) காலை 9-30 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (7-58—10-00) இடபலக்னம்

# பங்குனி மாதக் கிரகநிலை

| | மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் | |
|---|---|---|---|---|---|
| | ராகு சூ குரு | செவ் | | | |
| கும்பம் | புத | பங்குனி மாதக் கிரக நிலை | | | கடகம் |
| மகரம் | சுக் | | | | சிங்கம் |
| | நெப் யுரே | சனி | | கேது | |
| | தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி | |

## கிரக மாற்றங்கள்

9உ (23-3-87) பகல் 2-26க்கு கும்-சுக்
13உ (27-3-87) பகல் 12-18க்கு இட-செவ்
25உ (8-4-87) இரவு 8-36க்கு மீன-புத
1உ புதன் வக்ரத்தியாகம்.
1உ குரு அஸ்தமனம்.
25உ ,, உதயம்.
19உ சனி வக்ராரம்பம்.
20உ யுரேனஸ் வக்ராரம்பம்.
28உ நெப்டியூன் வக்ராரம்பம்.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பங் | 1உ | (15-3-87) | மாலை | 5-18 | முதல் | கன்னி |
| | 3உ | (17-3-87) | இரவு | 12-09 | ,, | துலாம் |
| | 5உ | (19-3-87) | பி.இ. | 5-05 | ,, | விருச்சிகம் |
| | 8உ | (22-3-87) | காலை | 8-35 | ,, | தனுசு |
| | 10உ | (24-3-87) | பி.இ. | 11-12 | ,, | மகரம் |
| | 12உ | (26-3-87) | பி.இ. | 1-36 | ,, | கும்பம் |
| | 14உ | (28 3-87) | மாலை | 4-44 | ,, | மீனம் |
| | 16உ | (31-3-87) | இரவு | 9-45 | ,, | மேடம் |
| | 19உ | (2-4-87) | அதிகாலை | 5-37 | ,, | இடபம் |
| | 21உ | (4-4 87) | மாலை | 4-22 | ,, | மிதுனம் |
| | 23உ | (6-4-87) | பி.இ. | 4-50 | ,, | கடகம் |
| | 26உ | (9-4-87) | மாலை | 4-39 | ,, | சிங்கம் |
| | 28உ | (11-4-87) | பி.இ. | 1-55 | ,, | கன்னி |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி பங்குனி மீ 30 உ பகல் 9-30 மணிக்கு இடப லக்னம் என அறிந்து கொண்ட பின் 'இடபம்' என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது தனுலக்கினம் உதயமாகிறது; இலக்கினாதிபதி வியாழன் 4-ம் வீட்டில் ஆட்சிபெறுகிறார். பொதுவாக நாட்டில் பலவித கெடுபிடிகளும் குறைந்து காணும். சற்று அமைதி நிலவும். பலவித தடைகள், பற்றுக்குறை என்பன நீங்கும் சாத்திபக்கூறுகள் தென்படுகின்றன. மக்கள் தத்தம் கருமங்களை தொடர்ந்து செய்யவும், போக்குவரத்துகளில் ஈடுபடவும் வசதிகள் தோன்றும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது; உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவாகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னாபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (பங்குனி மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 21 நிமிஷம்)

| வாரம் | 6..21<br>7..21 | 7..21<br>8..21 | 8...21<br>9...21 | 9 21<br>10 21 | 10...21<br>11...21 | 11...21<br>12...21 | 12...21<br>1...21 | 1...21<br>2...21 | 2...21<br>3...21 | 3...21<br>4...21 | 4...21<br>5...21 | 5...21<br>6 21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

யாழ். வானியற் கழகம்
167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு இல.78

# பங்குனி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

15-3-87 — 13-4-87

சூரியன்: 15-3-87 பின் இரவு மணி 12-52 A.M. மீனராசிப் பிரவேசம்.
15-3-87 உதயம் காலை 6-21
அஸ்தமனம் மாலை 6-18
13-4-87 உதயம் காலை 6-05
அஸ்தமனம் மாலை 6-17

சந்திரன்: 15-3-87 பூரணை மாலை 6-43
23-3-87 அபர அஷ்டமி காலை 8-46
29-3-87 அமாவாசை மாலை 6-16
30-3-87 சந்திரதரிசனம்
7-4-87 பூர்வ அஷ்டமி பி.இ. 2-30 A.M.

## கிரகங்கள்

புதன்: மாத ஆரம்பத்தில் சூரிய உதயம் முன் கீழ்வானில் 23 பாகை உயரத்தில் காணப்படும் இக் கிரகம் அன்று வக்கிரகதி நீங்கி நேர் கதியிற் செல்ல ஆரம்பிக்கும். 26-3-87-ல் சூரியனிலிருந்து கூடிய தூரம் 28 பாகையில் காணப்படும். மாதமுடிவில் 22பாகை உயரத்தில் காணப்படும். 8-4-87-ல் மீனராசியிற் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: மாத ஆரம்பத்தில் உதயம் முன் கீழ்வானில் 40 பாகை உயரத்திற் காணப்படும். இக்கிரகம் மாதமுடிவில் 34 பாகை உயரத்திற் காணப்படும். 23-3-87-ல் கும்பராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 52 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 42 பாகை உயரத்திற் காணப்படும். 1-4-87-ல் இடபராசியிற் பிரவேசிக்கிறது.

வியாழன்: மாத ஆரம்பத்தில் மேற்கில் அஸ்தமனமாகும் இக்கிரகம் 8-4-87-ல் கிழக்கில் உதயமாகும். 18-3-87-ல் மீனராசியிற் உத்தரட்டாதி 3-ம் பாதத்திலும் 31-3-87-ல் உத்தரட்டாதி 2-ம் பாதத்திலும் பிரவேசிக்கிறது. மாத முடிவில் உதயம் முன் கீழ்வானில் 13 பாகை உயரத்திற் காணப்படும்.

சனி: மாத ஆரம்பத்தில் உதயம் முன் உச்சியிற் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் உச்சிக்கு மேற்கே 32 பாகை சரிந்து காணப்படும். விருச்சிகராசியில் கேட்டை 4-ம் பாதத்திற் சஞ்சரிக்கும் இக்கிரகம் 2-4-87 தொடக்கம் வக்கிர கதியிற் செல்லும்.

இந்திரன்: தனுராசியில் மூலம் 1-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது. 3-4-87-ல் வக்கிரமடைகிறது.
வருணன்: தனுராசியில் பூராடம் 1-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது. 11-4-87-ல் வக்கிரமடைகிறது.
குபேரன்: துலாராசியில் சுவாதி 3-ம் பாதத்தில் வக்கிரகதியில் சஞ்சரிக்கிறது.

## சமாகமாதிகள்

17-3-87 நள்ளிரவு முன் சந்திரனுக்குத் தெற்கு சித்திரை நக்ஷத்திரம் 1 பாகை.

21-3-87 வஸந்த விஷு சமராத்திரி தினம்.

22-3-87 அதிகாலை 4-30 மணியளவில் சந்திரனுக்கு வடக்கு சனி 7பாகை.

26-3-87 மாலை சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் 3 பாகை. மறுநாள் விடியும் முன் அவதானிக்கவும்.

27-3-87 நண்பகல் சந்திரனுக்கு வடக்கு புதன் 1 பாகை. உதயம்முன் அவதானிக்கவும்.

29-3-87 பூரண சூரிய கிரகணம். எமக்குத் தெரியாது. ஆபிரிக்கா, தென் அமெரிக்காவில் தெரியும்.

2-4-87 பிற்பகல் சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 3 பாகை. அஸ்தமனத்தின் பின் கவனிக்கவும்.

# புத்திர தோஷம்

நம்மவர்களிடையே பல குடும்பங்களில் குழந்தைகள் பிறக்காமலும், பிறந்த குழந்தைகள் நிலைத்திருக்காமலும் அல்லற்படுகின்றவர்களைக் காண்கின்றோம். இவ்வாறு ஏற்படுவதற்கு காரணங்களுண்டு.

பூர்வஜென்மத்தில் காமவிகாரத்தாலும், மற்றும் அதர்ம வெறியாலும் செய்யப்பட்ட கர்ப்பம் கலைத்தல் என்ற கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட பிண்டங்களில் வாழ்ந்த உயிர்களும், சிசுக்களும் இட்ட சாபத்தினாலும்; மற்றும் வயோதிப காலத்துக்கு பயன்பட சேர்த்து வைத்திருந்த பிறரது பொருட்களை மோசஞ்செய்த பாவத்தினாலும்; மிருக, பிராணி வர்க்கங்களின் முட்டைகளையும், குஞ்சுகளையும் புசித்து வந்த தோஷத்தினாலும் உலகிலுள்ள மாந்தர்க்கு இப்பிறவியில் புத்திரதோஷம் சம்பவிக்கிறது. இவ்வாறு "சர்வதோஷ நிவாரண மஞ்சரி" என்னும் நூல் புத்திரதோஷத்திற்கான காரணங்களை விளக்குகிறது.

இத்தகைய சாபத்தீடுகளின் அளவு உச்சமானால் இந்த ஜன்மத்தில் தம்பதிகளுக்கு புத்திர உற்பத்தியே அற்றுப்போகிறது. மத்திமமானால் புத்திரர்கள் தோன்றி அழிய நேரிடுகிறது. சாபங்களின் அளவு குறைவாகவிருந்தால் புத்திர உற்பத்தி தோஷ சாந்தி செய்யப்பட்டபின் புத்திரர் தோன்றவும் நிலைக்கவும் செய்கிறது என்று மேற்படி நூல் பரிகாரம் கூறுகிறது.

அத்தகைய புத்திர தோஷ சாந்திகள் இருவகைப்படும். ஒன்று புத்திரர்கள் தோன்றாமல் இருக்கும் தம்பதிகள் செய்யவேண்டியது. இரண்டாவது புத்திரர்கள் உற்பத்தியாகி நிலைக்காமற் போகிறவர்கள் செய்யவேண்டியது என இருவகை சாந்திகளை "சப்தரிஷி நாடி" என்ற நூல் எடுத்துக்கூறுகிறது.

புத்திரர்களே தோன்றாமலிருக்கும் தம்பதியர்கள் செய்யவேண்டிய புத்திரதோஷ நிவாரண பரிகாரம்

ஷடி தோஷத்தால் பீடிக்கப்பட்டுள்ள தம்பதியர்கள் இருவரும் மேன்மைபொருந்திய பத்தாவது மாதமாகிய தைமாதத்தில் அமாவாசையன்று பக்தி சிரத்தையுடன் திருவள்ளூர் சென்று மங்களம் பொருந்திய வீரராகப் பெருமாளான கோதண்டபாணியைத் தரிசித்து அவரது பாதாரவிந்தங்களில் அர்ச்சனை செய்வித்து வழிபாடு செய்து, பின்னரும் தன் ஊருக்குத் திரும்பிவந்து ஒரு மண்டலகாலம் (42 நாட்கள்) அரசமரத்தை தொடர்ந்து பிரதட்சிணம் செய்து (வலம்வந்து) வருவார்களேயானால் முன்னை வினைகள் சாந்தியாகி தம்பதியர்களுக்கு குழந்தை பிறக்கும். அரசப்பிரதட்சிணம் அவசியம் மேற்கொள்ளவேண்டும்.

பிள்ளை பிறந்து பிறந்து இறந்துகொண்டிருக்கும் அல்லது கருக்கொண்டு கலைந்து கொண்டிருக்கும் தம்பதியர் மேற்கொள்ளவேண்டிய தோஷநிவாரண பரிகாரம்.


ஷடி தோஷத்தால் பீடிக்கப்பட்ட தம்பதியர் இருவரும் பக்தசிரத்தையுடன் திருத்தணிகைக்கு ஏழு கார்த்திகைகள் தொடர்ந்து சென்று பக்தியுடன் முருகனுக்கு அபிஷேகம், அர்ச்சனைசெய்து போற்றியும்; சிரத்தையுடன் "ஷஷ்டி விரதம்" ஒரு வருஷகாலம் தொடர்ந்து அனுஷ்டித்தும் வந்தால் உடனே தோஷங்கள் சாந்தியாகி குழந்தை ஜனிக்கும். குழந்தையும் நற்சுகமும், நீண்ட ஆயுளும் கொண்டதாக இருக்கும்.

## ஆசீர்வாதம்

துன்பம் மனத்தை இறைவன்பால் திருப்பி விடுகிறது. துன்பம் உள்ளத்தில் கருணையை உண்டாக்கி அதை மிருதுவாக்குகிறது. துன்பம் உள்ளத்தை புண்படுத்துகிறது. அது வைராக்கியத்தை உண்டுபண்ணுகிறது.

எவ்வாறு மரத்தின் இலைகளைக் கசக்கிப் பிழிந்தால்தான் வாசனைத் தைலம் கிடைக்குமோ, அதேபோல் மக்கள் துன்பமுற்றிருக்கும் போதுதான் அவர்களது உண்மை நிலையை உங்களால் புரிந்துகொள்ளமுடியும். ஆகவே துன்பம் மாறுவேடத்தில் வந்து அமையும் ஆசீர்வாதமேயாகும்.

— சுவாமி சிவானந்தா




**இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.**

**13-3-87 முதல் 14-4-87 வரை**

**பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.**



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இந்த இராசியில் செனனமானவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 12-ல் (விரையத்தில்) ரஜஸமூர்த்தியாகிப் பலம் பெறுவது பெரும்பாலும் நன்மையாகும். சூரியன் மூர்த்திபலம் பெற்றாலும் தானபெலம் குறைவலும். குரு பலன்கள் அதிகம் தடைப்படவே செய்யும். உடல் நலம் இடைக்கிடை பாதிப்படையும். பொருள் வரவிலும் செலவுகள் அதிகரிக்கும். வீட்டில் சுப கொண்டாட்டங்கள் நிகழுவது கேள்விக்குறியிலேயே இருக்கும். அந்நிய தேசசஞ்சாரம்-அலைச்சல்-கடன் பயம் அற்ப பொருள்வரவு-வீண்செலவுகள் முதலியவை நிகழும்.

குடும்பத்ல் அடிக்கடி சுகவீனங்கள் ஏற்படும். எதிர்பாராத திடீர்நெருக்கடிகளும் ஏற்படும். குடும்பத்தில் நல்லுறவும் பாதிப்படையும். சில சமயங்களில் குடும்பத்தில் பிரிவுகள் ஏற்படலாம்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் கவர்ச்சிகரமாக நிகழும். ஆனல் எதிர்பாராத திடீர் சுரண்டல்களும் செலவுகளும் வியாபாரத்திற்கு தடையாக அமையும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பும் பாராட்டுகளும் கிடைக்கும். ஆனல் வீண்செலவுகளும் அலைச்சலும் ஏற்படவே செய்யும். பிரயாணங்களில் விபத்துக்கள் ஏற்படலாம்.

விவசாயிகளுக்குப் பயிர்ச்சேதம் அதிகரிக்கும். பயிர் உற்பத்தியில் அதிகச் செலவுகளால் கடன் பழு ஏறும். கூலியாட்களும் தொல்லை தருவர். விவசாயப் பண்ணைகளிலும் விளைவுகள் குன்றும்.


தொழிலாளர் மத்தியில் அவநம்பிக்கையும் வேலையில்லாப் பிரச்சினைகளும் ஏற்படும். கிடைக்கும் வேலைகளுக்கும் உரிய வேதனம் கிடையாது. தொழில் பிணக்குகளும் அதிகரிக்கும்.

மாணவர் கல்வியில் குழப்பங்களும் திருப்பங்களும் ஏற்பட்டாலும் கல்வியூக்கம் முன்னேற்றம் காணும். கணிதத்துறை மாணவர் - கலைத்துறை மாணவர் விசேட சித்தியடைவர்.

பெண்களுக்கு மனவிருப்புக்கு எதிரான சம்பவங்களே அதிகம் நிகழும். எதிலும் ஏமாற்றங்களும் அவமானங்களும் ஏற்படக் கூடும். குடும்பப் பெண்களுக்கு திடீர் நெருக்கடிகள் சிரமம் தரும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 15பக.23,27,28,பக,31
ஏப். 1,5,6,10,11

துரதிஷ்டநாட்கள்: மார்ச். 16,17,20பக,21,29
ஏப். 12,13




கார்த்திகை, 2,3,4,ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ம்கால்

இடபராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 11-ல் (லாபத்தில்) லோக மூர்த்தியாகி வலம் வருகின்றார். சூரியன் தான பெலம் பெற்றாலும் மூர்த்திபலம் குறைவது நன்மை தராது. குருவின் சுபகோசார சஞ்சாரம் இருப்பது நன்மைதரும். பொதுவாக இவர்களின் உடல்நலம் குறைவடையும் பொருள் வருமானம் சுமாராக அதிகரிக்கும். ஆனல் எதிர்பாராத செலவுகளால் வருமானம் பற்றாக்குறைவாகவே இருக்கும். சகோதர வழிப் பிணிபீடைகள்-பிதிர்வழித் துன்பங்கள்-குடும்பத்தில் பிரச்சினைகள் முதலானவையும் இடம்பெறவும் கூடும். எனினும் புத்திரர் உதவிகள் வீட்டில் கொண்டாட்டங்கள் அல்லது மங்கள நிகழ்ச்சிகளும் நிகழும்.

குடும்பத்தவர்களுக்குப் பலப் பிரச்சனைகள் தோன்றி மறையும். குடும்ப சுகவீனம் முதலியன வற்றால் மன அமைதிக்குறைவு ஏற்படும். ஆனல் செலவுகள் அதிகரிப்பால் கடன்பயமும் இருக்கவே செய்யும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் தொடரும். பழைய கடன்நிலுவைகள்கூட அற விட்டுக்கொள்ளுவார்கள். முதலீடுகளில் லாபம் கிடைக்கும். வங்கி-நிதி உதவிகளும் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு முதலான விஷயங்கள் பேச்சளவிலேயே தொடரும். மேலதிகாரிகளின் உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படும். உடன் உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்.

விவசாயிகட்கு பயிருற்பத்திச் செலவுகள் கூடினாலும் நல்ல பயிர் விளைச்சலும் ஏற்படும். விவசாயப் பண்ணைகளிலும் விளைச்சல் கணிசமான அளவில் கூடும். கூலியாட்களின் உதவிகள் கிடைக்கும்.

தொழிலாளர் பிணக்குகள் தொடர்ந்தாலும் வேலைவாய்ப்புக்களும் கிடைக்கும். தினச்சம்பளத் தொழிலாளருக்கும் நாளாந்த சீவனத்துக்குக் கஷ்டமில்லாமல் வருமானம் கிடைக்கும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். கணிதத்துறை சட்டத்துறை மாணவர் சிறப்புச் சித்திபெறுவர். உயர்கல்வி வாய்பபு புலமைப்பரிசில்கள் வெளிநாட்டில் கல்விவாய்ப்பு முதலியனவும் சிலருக்குக் கிடைக்கும்.

பெண்களுக்கு எண்ணங்கள் பெரும்பாலும் கைகூடவரச் சாதகமான சூழ்நிலைகள் ஏற்படும். விவாக முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பப் பெண்களுக்குச் செலவுகள் அதிகரிப்பால் சிரமங்கள் ஏற்படும்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 16,17,25,29
ஏப். 2,3,8,12,18,

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 18,19,22,23,31.
ஏப். 1,2.




மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

மிதுனராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான 10-ல் தாம்பரமூர்த்தியாகி வலம் வருகிறார். சூரியன் மூர்த்திபலம் குறைதலின் சுபபலன் அதிகம் தடைப்படவே செய்யும். சூரியன் மூர்த்திபலம் குறைந்தாலும் தானபலம் பெறுவது ஓரளவு நன்மைதரும். பொதுவாக இவர்களின் உடல் நிலையில் பாதிப்புக்கள் இடைக்கிடை ஏற்படும் எடுத்த முயற்சிகளில் பெரும்பாலும் தடைதாமதங்களும் அநாவசியச் செலவுகளும் ஏற்படும். வருமானத்திலும் செலவுகள் கூடினாலும் ஆச்சரியமில்லை. எனினும் அந்நியர் உதவி, அந்நியநாட்டுப் பொருள்வரவு முதலியனவும் சிலருக்கு நிகழும்.

குடும்பத்தவர்களுக்குக் கணவன் மனைவி நல்லுறவு வளர்ச்சியுறும். குடும்ப வருமானம் குறையும். ஆனால் எதிர்பாராத திடீர்ச் செலவுகளும் சிலருக்கு ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை இந்த மாதமும் தொடரும். பழைய முதலீடுகளின் வருமானமும் குறைவுறும் நிதி நெருக்கடிகளும் ஏற்படும். புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கட்டுப்பாடுகள் அதிகரிக்கும். வேலை பொறுப்புக்களும் கூடும். சிலருக்கு பதவி மாற்றம் அல்லது இடமாற்றம் கூட ஏற்படலாம்.


விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி கூடும். விளைச்சலும் அதிகரிக்கும். ஆனால் பசளை மானியம்-மருந்துகள் சமயத்துக்கு கிடையாது. விவசாயப் பண்ணைகளிலும் விளைச்சல் கூடும்.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் அதிகரிக்கும், தொழில் பிணக்குகளும் வேலையின்மையும் சிலருக்கு ஏற்படும். தொழில் ஒப்பந்த வேலைகளில் எதிர்பார்த்த லாபங்கிடையாது,

மாணவர் கல்வித்தடைக் காரணிகளே வலுவடையும். மாணவர் விரக்தியுடன் கூடிய ஏமாற்றம்-மறதி முதலான குணங்களுடன் கல்வியில் நாட்டமின்றி இருப்பர்.

கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகள் பல சிரமங்களுடன் கைகூடிவரும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் ஒத்துழைப்பும் கிடைக்கும். வேலைப் பெண்களுக்கு வேலைப்பழு கூடும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 18,19,27,31
ஏப். 1,5,6,10,11
துரதிஷ்டநாட்கள்: மார்ச். 20பக.21,25,
ஏப். 2பக. 3,4



## கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

கடகராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் 9-ல் ரஜஸமூர்த்தியாகி இந்த மாதம் சம பெலத்துடன் பவனி வருவது நன்மை தீமைகள் கலந்த பலன்கள் நிகழும். பொதுவாக இவர்களின் உடல் நலம் சீராக இருக்கும். பொருள் வரவும் திருப்திகரமாக அமையும். சிரமங்கள் ஏற்பட்டாலும் காரிய சித்தியும் பெறுவர். தன்வீட்டில் அல்லது குடும்பத்தில் சுப சந்தோஷ கொண்டாட்டங்களும் இடம்பெறும். துக்க சம்பவங்கள் எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் முதலான துர்ப்பலன்களும் கலந்து நிகழும். தசாபுத்தி அந்தர பெலமுள்ளவர்களுக்குச் சுப பலன்களே அதிகம் நிகழும்.

குடும்பத்தில் சிறுசிறு பிணக்குகள் அவ்வப்போது தோன்றி மறையும். குடும்பப் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். வீட்டில் விவாகாதி நல்ல நிகழ்வுகளும் நடைபெறும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக முன்னேற்றம் பெறும். பழைய கடன் நிலுவைகளும் கிடைக்கும். முதலீடுகளில் லாபம் கிடைக்கும். தானிய வியாபாரிகளின் லாபம் கூடும்,

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் உத்தரவுகளைச் செயற்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படும். உடன் உத்தியோகத்தர்களின் உதவிகள் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தியில் சிரமங்கள் ஏற்படும்; இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிர் அழிவும் ஏற்படும். ஆனால் கணிசமான அளவு விளைச்சல் கிடைப்பதால் நட்டமேற்படாது

தொழிலாளர் மத்தியில் ஒத்துழைப்பும் நல்லிணக்கமும் ஏற்படும். கணிசமான அளவு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் அதிகலாபம் கிடையாவிட்டாலும் நட்டம் ஏற்படமாட்டாது.

மாணவர் கல்வியூக்கம் வளரும். கணிதத்துறை மாணவர்களுக்கு விசேட முன்னேற்றம் ஏற்படும். புலமைப் பரிசில்கள் கூடச் சிலருக்கு கிடைக்கும்.

பெண்களின் விருப்பங்களுக்கு தடைகள் ஏற்படும். குடும்பப் பெண்களுக்குக் குடும்ப சுகவீனம் முதலியவற்றால் செலவுகள் முதலியன ஏற்படுதலுடன் ஆறுதலின்மையும் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 16,17,21,29
ஏப். 3,8,9பக,12,13
துரதிஷ்டநாட்கள்: மார்ச். 22பக,23,27,28பக
ஏப். 4இர. 5,6



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

இவ்விராசியில் ஜெனனமானவர்கட்கு இந்த மாதம் சூரியபகவான் 8ல் சுவர்ணமூர்த்தியாகி மூர்த்திபலம் பெறுவது நன்மையாகும். சூரியன் மூர்த்திபலம் பெற்றாலும் தானபலம் குறைந்துள்ளதும் இங்கு அவனிக்கப்படவேண்டும். குருபகவானும் இவர்களுக்கு அட்டமகோசர சஞ்சாரம்செய்வதும் நன்மைதராது. பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராக இருக்கம். பொருள் வருமானமும் கணிசமான அளவு கூடும். ஆனல் எதிர்பாராத திடீர்ச் செலவீனங்களால் வருமானத்தில் பற்றுக்குறைவு ஏற்படுவதுடன் கடன்படவேண்டியும் இருக்கும். நண்பர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படும். புத்திரர் வழித்துன்பங்களும் ஏற்படும். தெய்வபக்தி வழிபாடுகளால் எதனையும் சமாளித்துக்கொள்ளமுடியும்.

குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சீராக இருக்கும். புத்திரர் சகோதரர் உதவிகள் கிடையாது. வீட்டில் சுப நிகழ்ச்சிக் கொண்டாட்டங்கள் நிகழுவது சந்தேகம்தான்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை தொடரும். முதலீடுகளில் நட்டம் ஏற்படாது. எனினும் புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. கடன்களை அறவிடுவதிலும் சிரமங்கள் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். பதவிப் பொறுப்புக்களும் கூடும். சிலருக்குப் பதவிகளில் மாற்றம்கூட நிகழும். உடன் உத்தியோகத்தர்களின் உதவிகள் எதிர்பார்த்தவரை கிடையாது.

விவசாயிகளுக்குப் பயிர் அழிவு தொடரும். விளைவும் திருப்தி தராது. விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் குறைவுறும். சந்தைப் படுத்துவதிலும் பாதிப்புக்கள் ஏற்படும்.

தொழிலாளருக்கு வேலைவாய்ப்புகள் பெருமளவில் குறைவுறும். நினச்சம்பள தொழிலாளரின் நாளாந்த வாழ்க்கையே பாரமாக இருக்கும். ஒப்பந்த வேலைகளில் சிரமங்கள் ஏற்படும்.

மாணவர் மத்தியில் பதட்டமும் அமைதியின்மையும் ஏற்படும். ஆசிரியர்-மாணவர் கருத்து வேறுபாடுகளும் கல்வி வளர்ச்சிக்குத் தடையாக அமையும். பரீட்சை முடிவுகளும் திருப்தியளிக்காது.

பெண்கள் மன ஆறுதலின்றி துன்பப்படக் கூடும். கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகளில் பெரும்பாலும் தோல்வி அல்லது ஏமாற்றங்கள் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 15பக.18,19,23,31
ஏப். 1,2காலை.5,10,11

துரதிஷ்டநாட்கள்: மார்ச், 25,29,30மு.இரவு
ஏப். 7காலை,8,9இரவு.



## கன்னி

உத்தரம் 2, 3, 4, அத்தம் சித்திரை 1, 2-ம் கால்

இந்தராசியில் செனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 7-ல் லோகமூர்த்தியாகி, பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நன்மை தராது. எனினும் குருபகவானின் கேந்திர திருஷ்டியும், சனிபகவானின் சுப கோசாரசஞ்சாரமும் இருத்தலின் அதிகம் துன்பம் ஏற்படமாட்டாது. பொதுவாக இவர்களின் உடல்நலம்-குடும்பநலம் என்பன சீராக இருக்கும். வீட்டில் சுப நிகழ்ச்சிகளும் நிகழும். பூமி-வீடு-வாகன வசதிகள் - விற்றல் வாங்கல் மூலமான லாபங்கள், புண்ணிய யாத்திரைப் பலன்கள் தூரதேசப் பொருள்வரவு முதலியனவும் உண்டாகும்.

குடும்பத்தில் பிணிபீடைகள் இடைக்கிடை ஏற்படும். குடும்பப் பெரியவர்கள், புத்திரர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும். குடும்பத்தில் மங்கள கொண்டாட்டங்கள் நிகழ வாய்ப்புண்டு.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தொடரும். முதலீடுகளின் லாபம் கிடைக்கும். வங்கி-நிதி நிறுவனங்களின் உதவிகளும் கிடைக்கும். புது முதலீடுகளுக்கு ஏற்றகாலம்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் விரோதமும் வெறுப்பும் துன்பந்தரும். உடன் உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிர் விளைவுகள் அதிகரிக்கும். விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் கூடும். விளைவு தானியம் முதலியனவற்றைச் சந்

தைப்படுத்துவதில் சிரமங்களும் அநாவசியச் செலவுகளும் ஏற்படும்.

தொழிலாளருக்குள் கருத்து வேறுபாடுகள் நீங்கும். வேலைவசதிகளும் கிடைக்கும். நாள்சம்பள தொழிலாளிகளுக்கும் நல்லவருமானம் கிடைக்கும். ஒப்பந்த வேலைகளில் லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்வியூக்கம் வளரும். சுயமுயற்சியும் ஆசிரியர்களின் வழிகாட்டலும் இவர்களின் கல்வித் தேர்ச்சியில் சிறப்புத்தரும். கணித-சட்டத்துறை மாணவர்கள் சிறப்புத் தேர்ச்சி பெறுவர்.

பெண்களின் விருப்பங்கள் பெரும்பாலும் நிறைவு பெறக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஏற்படும். கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகளும் காரிய சித்தியடையும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 16,17,20பக.21
ஏப். 2பக.3,4பக.8,12,13

துரதிஷ்டநாட்கள்: மார்ச். 15பக,27,28பக.31
ஏப். 1,2காலை.10,11




சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

துலாம் இராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 6-ல் சுவர்ணமூர்த்தியாகி வலம் வருவது நன்மையாகும். சூரியன் மூர்த்திபலம்-தானபலம் பெறுதலின் கடந்த காலங்களில் அனுபவித்த கஷ்ட நட்டங்களிலிருந்து விடுபட்டு ஆறுதல் பெறுவர். தேகசுகம், குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். முன்பு தடைப்பட்டிருந்த காரியங்களில் வெற்றியும் பெறுவர். பொருள் வருமானமும் அதிகரிக்கும். ஆனல் குருவும் சனீஸ்வரனும் துர்க்கோசாரசஞ்சாரம் செய்தலின் விழுதல் முதலான விபத்துக்கள்-பொருள்நட்டம் - பந்துசன துன்பம் - அந்நிய தேச சஞ்சாரம்-அலைச்சல் முதலான துர்ப்பலன்களும் சிலருக்குக் கலந்து நிகழவும் இடமுண்டு.

குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சீராக இருக்கமாட்டாது. சிறுசிறு பிணக்குகளும் அவ்வப் போது தோன்றி மறையும். ஆனல் குடும்ப வருமானம் போதியவரை முன்னேற்றம் காணும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை இந்த மாதமும் தொடரும். கடன் நிலுவைகளையும் அறவிட முடியாத நிலை ஏற்படும். முதலீடுகளின் வருமானமும் குன்றும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்களும் கிடைக்கும். எனினும் உடன் ஊழியர் அல்லது கீழ் உத்தியோகத்தர்களின் விரோதம் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்கு பயிரழிவுகள் ஏற்பட்டாலும், பயிர்விளைவுகள் அதிகரிக்கவே செய்யும். பண்ணைகளிலும் விளைவுகள் அதிகரிக்கும். நல்ல சந்தை வாய்ப்புக் கிடைத்தலின் இவர்களுக்கு நட்டம் ஏற்படாது.

தொழிலாளர்களுக்குள் பிணக்குகள் வலுவடையும். வேலைவாய்ப்புக்களும் குறைவுறும். பல தொழிலாளர் வேலை நீக்கம் அல்லது தொழில் இல்லாமல் கஷ்டப்படவும் கூடும்.

மாணவர் கல்வி வளர்ச்சி பெரிதும் தடைப்படும். மாணவர் மத்தியில் ஏமாற்றமும்-விரக்தியும் வளரும். பரீட்சை முடிவுகளும் திருப்தியளிக்காது. சுயமுயற்சியுடையவர்கள் சித்தியடைவர்.

பெண்களின் எண்ணங்கள் பெரும்பாலும் நிறைவேறாத மாதம். குடும்பப் பெண்களுக்கு கணவன் மாரின் நெருக்கடிகளும் தோன்றும். வீட்டில் அநாவசியச் செலவுகளும் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 15பக,18,19,23,27,
ஏப். 5,6,10,11

துரதிஷ்டநாட்கள்: மார்ச். 16,17,29
ஏப். 2பக 3,4பக.12,18




விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 5-ல் தாம்பர மூர்த்தியாகி சம பலத்துடன் வலம்வருவது நன்மை கலந்த தீய பலன்கள் நிகழ வேண்டும். பொதுவாக இவர்களின் தேகசுகம், குடும்பசுகம் என்பன இடைக்கிடை பாதிப்படையச் செய்யும். தடை தாமதங்களின் மேல் காரிய சித்தியும் பெறுவர். வீடு-வாகன சிறப்பும், பெரியோர் உதவிகளும் கிடைக்கும். பொருள் வருமானமும் திருப்திதரும். ஆனல் எதிர்பாராத செலவுகள் ஏற்படுதலால்

வருமானத்தில் பற்றாக்குறைவும் ஏற்பட்டுக் கடன் பயமும் ஏற்படும். எவ்வாறாயினும் இவர்களுக்கு மன ஆறுதலின்மையும், கோபகுணமும், அவசர புத்தியும் ஏற்படவே செய்யும். தெய்வ பக்தியால் எதனையும் சமாளித்துக் கொள்ளலாம்.

குடும்பத்தவர்களுக்கு கணவன்-மனைவி உறவும் சீராக இருக்கும். ஏழரைச் சனீஸ்வரனின் காலமாதலின் அநாவசியச் செலவுகளும் அலைச்சலும் குடும்பத்தில் அமைதிக்குறைவேற்படும்.

வர்த்தகர்களுக்கு வாடிக்கையாளரின் நல்லெண்ணம் ஆதரவும் இருக்கும். நிதி நிலைமை-வங்கி வசதியெல்லாம் ஓரளவு சீராக இருக்கும். முதலீடுகளிலும் கணிசமான லாபம் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு எதிர்பாராத வேலைப் பொறுப்புக்களையும் அதிகாரிகள் சுமத்துவார்கள். அடிக்கடி மேலதிகாரிகளின் கோபங்களைச் சமாளிக்க வேண்டியும் இருக்கும்.

விவசாயிகளுக்குப் பயிரழிவு தொடரும். மானியம்-பசளை வசதிகள் கிடைப்பதில் சிரமங்கள் ஏற்படும். விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் வீழ்ச்சியுறும்.

தொழிலாளர் மத்தியில் பிணக்குகள் இடைக்கிடை ஏற்பட்டாலும் சாதாரணமாக வேலைவசதிகள் கிடைக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் குறைந்தாலும் நட்டம் வராது.

மாணவர் கல்வி முன்னேற்றம் ஏற்படும். சட்டத்துறை-கலைத்துறை மாணவரின் கல்வியில் விசேட முன்னேற்றம் ஏற்படும். சிலருக்கு புலமைப் பரிசில்கள் உயர்கல்வி வாய்ப்புகிடைக்கலாம்

பெண்களுக்குப் பெரும்பாலும் மனச்சந்தோஷமான காலம். விவாக முயற்சிகள் காரிய சித்தியும் பெறும். குடும்பப் பெண்களுக்கு கணவன் மாரின் அன்பும்-ஆறுதலும் மகிழ்ச்சி தரும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 16,17,21,25,28மாலை.
ஏப். 8,9பக.12,13

துரதிஷ்டநாட்கள்: மார்ச். 18,19,31
ஏப். 1,2காலை.5,6



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால் தனுராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 4-ல் ராஜஸமூர்த்தியாகி வலம் வருவது நன்மையாகும். கடந்த காலங்களில் நிகழ்ந்த கஷ்ட நட்டங்களிலிருந்து இவர்களுக்கு ஓரளவு ஆறுதல் கிடைக்கும். தேகசுகம் சீராக இருக்கும். முன்பு தடைப்பட்டிருந்த காரியங்களில் காரிய சித்தியும் பெறுவம். சாதாரணமாக இவர்களின் வருமானத்தில் முன்னேற்றம் ஏற்படும். எனினும் செலவுகளும் கூடுதலாக இருக்கும். குருபகவான் கேசார பலன் குன்றினாலும் கேந்திரத்தில் அம்ச யோகம் பெறுதலின் பெரியோர்கள் உதவி, போசனசுகம், தருமசிந்தை முதலானவற்றைப் பெறுவர்.

குடும்பத்தில் கணவன் மனைவி நல்லிணக்கம் வலுப்பெறும். குடும்பவருமானமும் திருப்தியளிக்கும். உறவினருடன் பகை விரோதங்களும் ஏற்படும். புத்திரர் உதவிகள் கிடையாது.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் பாதிப்படையும். பழைய கடன் நிலுவைகளைக் கூட அறவிட முடியாத சூழ்நிலைகள் ஏற்படும். முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். சிலருக்குப் பதவி உயர்ச்சி முதலான நன்மைகளும் கிடைக்கும். ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச் செலவுகள் கூடும். கூலியாட்களும் பிரச்சினைகளைக் கொடுப்பர், விவசாயப் பண்ணைகளிலும் விளைச்சல் குன்றும். சந்தை வாய்ப்பும் லாபம் தரமாட்டாது.

தொழிலாளிகள் மத்தியில் அமைதிக் குறைவும், வேலையில்லாப் பிரச்சினைகளும் வளரும். கிடைக்கும் வேலைகளுக்கும் சம்பளம் முழுமையாகக் கிடைப்பதும் சந்தேகமே!

மாணவர் கல்வி வளர்ச்சி பெருமளவில் குறைவுறும். சில மாணவர் கல்வியைத் தொடர விரும்பாமல் இடைநிறுத்தினாலும் ஆச்சரியமில்லை; எனினும் கலைத்துறை மாணவர் சுயமுயற்சியால் முன்னேற முடியும்.

பெண்களுக்கு ஆசைக்கு அணைபோட வேண்டிய காலம். பெரும்பாலும் இவர்கள் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக வருதலின் மனக்குழப்பமடைவர். விவாக முயற்சிகளும் பெரும் சிரமங்களுடன் முன்னேற வேண்டும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 18,19,23,27,28பக.
ஏப். 1,9மாலை.10,11

துரதிஷ்டநாட்கள்: மார்ச். 20பக.21,22காலை,
ஏப். 2பக.3,4பக.8



## மகரம்

உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2

இந்தராசியில பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரிய பகவான் 3-ல் லோகமூர்த்தியாகி மூர்த்தி பலக்குறைவுடன் வலம் வருவது மத்திம சுகதிதையே தரும். சூரியன் 3-ல் கோசார சஞ்சார பெலம் பெறுவது நன்மையாகும். பொதுவாக இவர்களின் தேககைம் இடைக்கிடை பாதிப்படையும். சிலருக்கு வயிறு சம்பந்தப்பட்ட அஜீரணம் முதலான நோய்கள் - சத்திரசிகிச்சைப் பயம் முதலியனவும் ஏற்படக் கூடும். வீட்டில் சுப கொண்டாட்டம் முதலிய நிகழுவதற்கு அதிகம் சந்தர்ப்பங்கள் கிடையாது. இயந்திரம்-இரும்பு-எண்ணெய் வகைகளால் விற்றல் வாங்கல் முதலான லாபங்களும் ஏற்படும். எனினும் இராசாங்க அதிகாரிகள் தொல்லை புத்திர பௌத்திரர் வழித் துன்பங்களும் தொடரவே செய்யும்.

குடும்பத்தவர்களுக்கு வாழ்க்கைப் பிரச்சினைகள் கவலைதரும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். கணவன்—மனைவி சச்சரவுகளும் சிலசமயங்களில் பிரிந்து வாழவேண்டியும் வரும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு முன்னேற்றமடையும், வாடிக்கையாளரின் வருகையும் கூடும். தானியவகை-இரும்பு-எண்ணெய் வியாபாரம் நல்ல லாபம் தரும்.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகரிக்கும். எவ்வளவு முழுமனதுடன் உழைத்தாலும் மேலதிகாரிகளின் கோபங்களுக்கு ஆளாகவேண்டியும் இருக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்ச் செழிப்பும் விளைவும் மகிழ்ச்சி தரும். வரகு-எள்ளு முதலிய தானியங்களில் விளைச்சல் கூடும். விவசாயப் பண்ணைகளிலும் விளைச்சல் பெருகும்.

தொழிலாளருக்குள் பிணக்குகள் அதிகம் ஏற்படமாட்டாது; வேலைவசதிகளும் ஓரளவு கிடைக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் வராது.

மாணவர் கல்வி வளர்ச்சி தொடரும். கணிதத்துறை மாணவர் கல்வித் தேர்ச்சி சிறப்புடன் அமையும். கல்வி அதிகாரிகளின் சட்டதிட்டங்களால் கல்விக் குழப்பநிலையும் ஏற்படும்.

பெண்களுக்கு விருப்பங்களை நிறைவேற்றுவதில் சிக்கல்கள் ஏற்படும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் வருமானத்திற்குத் தகுதியான எண்ணங்கள் நிறைவுபெறும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 16,17,21,22கா, 25
ஏப். 2பக 3,4பக.12,13

துரதிஷ்டநாட்கள்: மார்ச். 15பக.22பக.23
ஏப். 4இர5,6,10,11



## கும்பம்

அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3

கும்பராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 2ல் தாம்பரமூர்த்தியாகி வலம் வருவது நன்மை தீமைகள் கலந்து நிகழும். பொதுவாக இவர்களின் தேகாரோக்கியம் சீராக இருக்கும். பெரியவர்கள் சமய குருமாரின் ஆசிகளும் கிடைக்கும். அலைச்சல் மூலம் காரியசித்தியும் பெறுவர். குடும்பத்தல் சந்தோஷ கொண்டாட்டங்களும் நிகழும். பொருள் வருமானமும் திருப்திதரும். வீடு, வாகன சுகமும் உண்டாகும். ஆனால் சூரியன் பலம் குறைவதால் இராசதண்டனை சிரசில் பிணிபீடைகள் பிதிர்வழித் துன்பங்கள் தொழில் நட்டம் முதலானவையும்கலந்து சிலருக்கு நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு மனநிறைவான சம்பவங்கள் பெரும்பாலும் நிகழும். கணவன் மனைவி நல்லுறவும் வளரும். பொருள் வருமானமும் குடும்பத்துக்கு அமைதியைத் தரும்; புத்திரர் உதவிகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் லாபம் குறையும். வாடிக்கையாளரின் வரவும் வீழ்ச்சியுறும். கடன் நிலுவைகளும் அறவிடமுடியாத நிலையேற்படும். வங்கி நிதி இருப்புக்களும் குறைவுறும்.

உத்தியோகத்தர்கட்கு வேலைப்பழு அதிகரிக்கும்; அதிகாரிகளும் இவர்களில் அடிக்கடி சீற்றம்

கொள்ளுவர். சக உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்.


விவசாயிகட்கு பயிர்விளைச்சல் குறைவுறும். இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிரழிவும் ஏற்படும். கடன்பயமும் ஏற்படும். வாழ்க்கைத் தரமும் குறைவுறும்.

தொழிலாளர் வேலைவசதிகள்குறைவால் நலிவுறுவர். தொழில் பிணக்குகளும் இவர்களுக்குப் பிரச்சினைகளைக் கொடுக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் கிடையாது.

மாணவர் கல்வியூக்கம் தொடர்ந்து வளர்ந்தாலும் கல்விமுன்னேற்றத்திற்கு பல இடையூறுகளும் அவ்வப்போது ஏற்படும். சுயமுயற்சியால் மாணவர் கல்வித் தேர்ச்சி பெறுவர்.

பெண்களுக்குப் பலப்பல பிரச்சினைகள் ஏற்படும். காதல் விவகாரங்களில் சிரமங்களுடன் முன்னேற்றம் கிடைக்கும். விவாகமுயற்சிகளும் அலைச்சல் மூலம் கைகூடும்.

அதிஷ்ட நாட்கள்: 18,19,23,27,31.
ஏப். 1,5,6.
துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 16,17,25.
ஏப். 8,9,12,13.



# மீனம்

பூரட்டாதி 4; உத்தரட்டாதி, ரேவதி

இவ்விராசியிற் பிறந்தவர்கட்குச் சூரியபகவான் இம்மாதம் சென்மத்தில் சுவர்ணமூர்த்தியாகி வலம்வருவது நன்மையாகும். பொதுவாக இவர்களின் கடந்த காலங்களிலும் பார்க்க இம்மாதத்தில் பல சிறப்புக்களைப்பெற வாய்ப்புக்கள் ஏற்படும். தேகசுகம் குடும்பசுகம் முதலானவை சீராக இருக்கும். வருமானமும் வளரும். குடும்ப சிறப்பு காரியசித்தி - பூமி - வீடு - வாகன வசதிகளும் ஏற்படும். ஆனால் வாக்குவிரோதம், அந்நியர் தொல்லை முதலானவையும் சிலருக்கு உண்டாகும். தசா-புத்தி-அந்தரபலம் உள்ளவர்கட்கு சுப பலன்களே அதிகரிக்கும்.

குடும்பத்தவர்கட்கு சிறு சிறு சச்சரவுகளும் பிணி பீடைகளும் இடைக்கிடை தோன்றிமறையும். குடும்பவருமானம் அதிகரிக்கும். புத்திரர் உதவிகளும் கிடையாது; இனசன பந்துக்களுடன் பகை விரோதங்களும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் குறைந்தாலும் நட்டம் வராது. வியாபார மந்த நிலையும் தொடரும். நிதிபற்றாக்குறைவும் ஏற்படும். புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்கட்குப் பதவிச்சிறப்பு அல்லது ஊதியவுயர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் பாராட்டுக்களும் அவ்வப்போது கிடைக்கும். ஆனால் சக உத்தியோகத்தர்களின் கருத்துமோதல்களும் ஏற்படும்.

விவசாயிகளுக்குப் பயிர்ச்சேதம் தொடர்ந்தாலும் நல்ல விளைவினால் நட்டம் ஏற்படாது. விவசாயப் பண்ணைகளிலும் விளைவுகள் அதிகரிக்கும். நல்ல சந்தைவாய்ப்பும் பெறுவர்.

தொழிலாளர் சீவியத்திற்குப் போதிய வேலைவசதிகள் பெறுவர். தொழில் பிணக்குகளும் இடைக்கிடை ஏற்படும். தொழில் ஒப்பந்தவேலைகளில் லாபம் குறைந்தாலும் நட்டம் வராது.

மாணவர் கல்விவளர்ச்சி தொடரும். விஞ்ஞான மருத்துவத்துறை மாணவர் சிறப்பு முன்னேற்றம் பெறுவர். சிலருக்குப் புலமைப்பரிசில் கள்கூடக் கிடைக்கும்.

பெண்களுக்கு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய மாதம். காதல் முயற்சிகளில் ஏமாற்றப்பட்டாலும் ஆச்சரியமில்லை; விவாக முயற்சிகளும் பெரும்பாலும் தோல்வியையும் தழுவிடஉண்டு.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 20,21,25,29,30.
ஏப். 2,3,8,9.
துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 15,18,19,27.
ஏப். 10,11.

---

முக்கிய குறிப்பு:

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

ஆ-ர்

---

# கோள்களும் கால அளவுகளும்

— பிரம்மஸ்ரீ ந. கந்தசாமி ஐயர், கோண்டாவில். —

*(ஐப்பசி மாத தொடர்)*

## வருஷ அளவும் அதில் ஓர் ஆய்வும்

நாள் மாசம் வருடம் ஆகிய மூன்று கால அளவுகளில் வருடமே காலத்தை அளக்கும் பெரிய அளவாக விளங்குகிறது. உலகெங்கும் இவ்வளவு கைக்கொள்ளப்பட்டாலும் அளக்கத் தொடங்குமிடத்தில் வேறுபாடு காணப்படுகிறது. ஐரோப்பியர் ஜனவரி முதலாந்திகதியிலிருந்து கணக்கிடுகிறுர்கள். நாம் சூரியன் மேஷராசியிற் பிரவேசிக்கும் சித்திரை முதலாந்திகதியிலிருந்து கணக்கிடுகிறோம். ஆந்திரர் முதலானோர் பங்குனியில் வரும் பூர்வப் பிரதமையிலிருந்து கணக்கிடுகிறுர்கள். கேரளவாசிகள் ஆவணி மாசப்பிறப்பிலிருந்து கணக்கிடுவார்கள். இவ்வாறு தொடங்குங்காலம் வேறுபட்டாலும் கால அளவாகிய வருட காலக் கணக்கில் அதிக மாற்றமில்லை. அதிகமாற்றமில்லையானதால் சிறிது மாற்றமுண்டென்பது புலனுகும்.

பூமத்திய ரேகையில் சூரியனுச்சமாய் நிற்கும் வசந்த விஷுவ (Vernal Equinox) தினமாகிய மார்ச் 21லிருந்து சூரியன் வடதிசைநோக்கி நகர்ந்து வடஅட்சம் 23½ பாகையில் உள்ள கர்க்கடக ரேகையில் (Tropic of cancer) ஜூன் 22ல் (Summer Solstice-தக்ஷிணுயனுரம்பம்) உச்சமாகிப் பின் திரும்பித் தென்திசைநோக்கி நகர்ந்து செப்டம்பர் 22ல் பூமத்தியரேகையில் உச்சமாகி (autumnal Equinox) மேலும் தெந்திசை நோக்கிநகர்ந்து டிசம்பர் 22ல் தென்அட்சம் 23½ பாகையிலுள்ள மகரரேகை (Tropic of capricorn) யில் உச்சமாகி (Winter Solstice-உத்தராயனுரம்பம்) பின்திரும்பி வடதிசைநோக்கி நகர்ந்து மார்ச் 21ல் பூமத்திய ரேகையில் உச்சமாகும் வரையுள்ள காலமே ஒரு வருடம் என்ற பெரிய காலஅளவாகக் கொள்ளப்பட்டது: இது பூமியைப் பொறுத்தவரை சூரியனின் ஒரு சுற்றோட்ட காலத்தைக் குறிப்பதாகும். இந்நிகழ்வு பூமியில் கர்க்கடக மகர ரேகைகளுக்கிடையிலுள்ள உஷ்ண வலயத்துக்குள் (tropics) நிகழ்வதால் இதனை Tropical year என்று ஆங்கிலத்தில் கூறுவர். இதனை நாம் சாயன வருடம் என்று அழைக்கிறோம்.

இதன் கால அளவு 365 நாள் 48 நி. 45.6 செக். ஆகும். சாயன வருடமென்பது அயனத்தோடு கூடிய வருடம் என்பதாகும். அதன் விளக்கம்: ஓர் நகரும் ஸ்தானத்தை ஆரம்பமாகக் கொண்டு இவ்வருடம் கணக்கிடப்படுவதால் இப்பெயர் பெற்றது.

ஸ்திரமான ஒரு ஸ்தானத்தை ஆரம்பமாகக் கொண்டு கணக்கிடப்படும் வருடம் நிரயன வருடம் எனப்படும். அயனமற்ற அல்லது சலனமற்ற வருடம் என்பது அதன் பொருளாகும். இராசி மண்டலத்திலுள்ள நிலையான நக்ஷத்திரத்தைக் கொண்டு கணக்கிடுவதால் இதனை நக்ஷத்திரவருடம் என்ற கருத்துக் கொண்ட Sidereal year என ஆங்கிலத்தில் வழங்குவர்.

இதன் காலம் 365 நாள் 6 மணி 9 நிமி 9.7 செக். ஆகும். இதுவே சூரியன் 360 பாகை கொண்ட நீள்விருத்தப் பாதையில் ஒருமுறை சஞ்சரித்து முடிக்கும் காலமாகும்.

பூமத்திய ரேகைக்கு மேலாகவுள்ள விஷுவ ரேகையும் (Celestial Equator) சூரியன் செல்லும் பாதையாகிய கிராந்தி விருத்தமும் (Ecleptic) ஒன்றுக்கொன்று சரிவாக 23½ பாகையில் அமைந்திருக்கின்றன. விஷுவ ரேகையில் சூரியன் நிற்கும்பொழுது அதனுடன் ஒரு நட்சத்திரமும் உச்சமாக நிற்பதாக வைத்துக்கொண்டால் ஒருவருடம் கழித்து திரும்பவும் சூரியன் விஷுவரேகையில் உச்சமாகும்பொழுது, அதாவது ஒரு சாயன வருடம் முடியும்பொழுது முன் சூரியனுடன் காணப்பட்ட நட்சத்திரம் சூரியனுக்குக் கிழக்கில் 50.27 விகலை தூரத்தில் காணப்படும். இத்தூரத்தைச் சூரியன் கடக்கவே மேலதிகம் 20 நி. 24 செக் தேவைப்படுகிறது. இதனையே அயனகதி என்பர். ஆகவே ஒரு வருட அயனகதி பாகைக்கணக்கில் 50–27 விகலையும் நேரக்கணக்கில் 20நி. 24 செச். கொண்டதாகும். அயனகதியின் வருடகாலப் பெருக்கமே அயனும்சம் என்று கூறப்படுகிறது. அயனும்சம் 70 வருடத்தில் 1 பாகை ஆவதினுல் எதிர்வரும் பிரபவஓு அயனும்சமாகிய 23பாகைக்

40கலை 34விகலையைக் கொண்டு கணக்கிடும் பொழுது இற்றைக்கு 17 நூற்றாண்டுகளுக்குமுன் அஸ்வினி நட்சத்திர ஆரம்பத்தில் விஷுவம் இருந்ததையும் இப்பொழுது அவ்வளவு தூரம் மேற்கே நகர்ந்துள்ளதென்பதையும் அறியலாம். அதனாலேயே சாயனவருடம் மார்ச் 21லும் நிரயனவருடம் ஏப்ரில் 13லும் பிறக்கின்றன.

இதிலிருந்து சூரியனின் சுற்றோட்டத்தால் வருடம் ஏற்பட்டாலும் அதன் ஆரம்பஸ்தான வேறுபாட்டால் இரண்டுவகையான வருட அளவுகள் ஏற்பட்டிருத்தலைக் காணலாம். பிரத்தியக்ஷத்துக்கு இலகுவான சாயன வருடமே உலகம் முழுவதும் கைக்கொள்ளப்பட்டு வருவது மட்டுமன்றிப் பருவ காலங்களையும் தவறாது காட்டக்கூடியதாய் அமைந்துள்ளது. ஆனால் வருடமாகிய கால அளவுக்கு சாஸ்திர ரீதியாக அமைந்த நிறைவான அளவையாகக் கொள்ளமுடியாது. ஏனெனில் அது சூரியனின் பூரண சுற்றோட்டத்தைக் காட்டவில்லை. எனினும் இதனையே நமது வயதைக் கணக்கிடுவதிலும் சரித்திர சம்பவங்களைக் குறிப்பதிலும் பின்பற்றி வருகிறோம். இதனால் 70 வருடத்தில் ஒரு நாளும் 26000 வருடத்தில் ஒரு வருடமும் தானே வேறுபடும் என்ற எண்ணம் போலும். நிரயன வருடம் பூரண சுற்றோட்டத்தைக் குறிப்பிடுவதால் அதனைக் கால அளவாகக் கொள்வதே சாலப் பொருத்தமானது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தியா இலங்கை ஆகிய நாடுகளில் வெளியாகும் பஞ்சாங்கங்களெல்லாம் நிரயன வருடத்தையே பின்பற்றிக் கணிக்கப்பட்டு வெளியாகின்றன. அவற்றில் விரதாதி நிர்ணயங்கள் யாவும் நிரயன வருட மாசங்களைக் கொண்டே அமைந்துள்ளன. ஆனால் அயனங்கள் ருதுக்கள் ஆகிய பருவகால ஆரம்பத்தைச் சாயன வருடத்தைக் கொண்டே நிர்ணயிக்க வேண்டும். அவ்விதம் செய்யாமல் பல பஞ்சாங்கங்கள் உத்தராயண தக்ஷிணாயனங்கள் முறையே தை மீ 1வ யிலும் ஆடி மீ 1வ யிலும் ஆரம்பிப்பதாகக் குறிப்பிடுவதும் சித்திரை வருஷப்பிறப்பிலன்று விஷுபுண்ணிய காலமென்று குறிப்பிடுவதும் அறியாமையால் நிகழும் தவறுகளாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

கி.பி. 6-ம் நூற்றாண்டில் வசித்த இந்திய வானியல் மேதை ஆகிய வராஹமிகிரரே இந்திய வானியலில் நிரயன வருட வழக்கத்தை ஏற்படுத்திப் பெரிய மாற்றத்தைச் செய்தவராவர். 3-ம் நூற்றாண்டின் இறுதியில் அஸ்வினி ஆரம்பத்தில் விஷுவேகை இருந்ததைக் கணக்கிட்டு அஸ்வினி முதல் 27 நக்ஷத்திரங்களையும் மேடம் முதல் 12 ராசிகளையும் நிலையான நக்ஷத்திரங்களாகவும் ராசிகளாகவும் (fixed nakshatras and Rasis) அமைத்ததோடு தனது காலத்தின் அயனாம்சத்தையும் அறிந்திருந்தார். அதன் பின் இந்திய வானியலாரும் பஞ்சாங்க கணிதர்களும் அதனையே பின்பற்றி வரலாயினர்.

கோள்களும் கால அளவுகளும் என்ற தலைப்பில் இதுவரை சூரிய சந்திரர்களின் ஆதிக்கமே நாள் மாசம் வருடம் ஆகிய மூன்று அளவைகளிலும் இருக்கக் கண்டோம். மற்றைய கோள்கள் இதிற் சம்பந்தப்படாவிட்டாலும் சில தொகை வருட காலத்தைக் கணிப்பதில் பங்குகொள்கின்றன.

கிரகங்களிற் பெரியதாகிய வியாழன் ஒருமுறை சுற்றிவர 12 வருடங்கள் செல்வதால் அக்காலத்தை வியாழ வட்டமெனக்கொண்டு 12வருடத்துக்கொருமுறை மகாமகத் தீர்த்தம் கொள்ளப்படுகிறது. இதனாலேயே ஆலயங்கள் 12 வருடத்துக்கொருமுறை கும்பாபிஷேகம் செய்யப்படுதல் வேண்டும் என்னும் ஆகமவிதியும் எழுந்தது. சனியின் சுற்றோட்ட காலமாகிய 30வருடம் அதிக முக்கியம் வாய்ந்ததாகக் கொள்ளப்படவில்லை.

ஒரு குறித்த காலத்தில் இராசிகளில் இருந்த கிரகங்கள் 60 வருடத்தில் அதே இராசிநிலையில் காணப்படுமாதலால் 60 வருடம் முக்கிய கால அளவையாகக்கொண்டு அவ்வறுபது வருடங்களுக்கும் பிரபவ முதல் க்ஷய ஈறாகப் பெயரிட்டு வழங்கி வருவதோடு ஷஷ்டியப்த பூர்த்தி விழாக்களும் கொண்டாடி வருகிறோம். இதனை வைரவிழா (Diamond Jubilee) என மேல்நாட்டினரும் கொண்டாடுவர். இவ்வறுபது வருடத்தின் இருமடங்கே மகா தசைகளின் மொத்தசங்கியையாக அமைவதையும் நோக்கலாம்.

80 வருடங்களில் 1000 சாந்திரமாசங்கள் நிகழுவதால் 80 வயது பூர்த்தியானவர்களை 1000 பிறைகண்டவர் என்று வாழ்த்தி வணங்குகிறோம்.

இதிலிருந்து காலதேவனின் கையாட்களே கோள்கள் என்பது ஒருவாறு புலனாகும். (முற்றும்)

# எண் சோதிடமும் அதன் உண்மைகளும்

## 3. அடிப்படை எண்கள்

(சென்ற இதழ் தொடர்)

பராசரரைப்போல் ஒருசிலர் இராகுவின் பெறுமான எண் 8 ஆகக் கருதினுர்கள். முன்பு சூரியனுடன் ராகு எப்படியெல்லாம் பின்னிப் பிணைந்திருப்பதை ஆராய்ந்தோம். சூரியனுக்கு எண்-1 என்னும்போது சூரியனுடன் பின்னிப் பிணைந்திருக்கும் இராகுவிற்கு எப்படி எண் 8 பொருந்தும்? எண் குறியீடுகளிலும் பொருத்தம் காணப்படவில்லையே! எண்-1 ஒரு குறியினுல் உருவாகியதென்ருல் எண்-8 ஏதாவது குறியினுல் உருவாகியதா? எண்-1 ஒளியானுல் எண்-8 நிழலாகுமா? இரு முட்டைகளை ஒன்றின்மேல் ஒன்ருக அடுக்கியது போலல்லவா எண்-8 காட்சியளிக்கிறது!

இலக்கம் அல்லது எண்-3 திறந்த இருமுட்டைகள் ஒன்றின்மேல் ஒன்று அடுக்கியதுபோல் காட்சியளிக்கின்றது. வட்டவடிவமான இரு கூடுகள் திறந்து விடப்பட்டிருப்பதையும் அதற்குள் இருந்த பறவைகள் வெளிச்சென்று குடும்பம் நடாத்தி விருத்தியடைவதையும் உணர்த்துகின்றது. குரு பொதுவாக முன்னேற்றத்தையும் விருத்தியையும் விஸ்தரிப்பையும் குறிக்கும். முட்டைகளிலுள்ள கரு விருத்தியடைந்து வளர்ந்து, முட்டையை உடைத்து வெளிச்சென்று சுதந்திரமாக தன் இனத்துடன் கலந்து குடும்பம் நடாத்தி தன் இனத்தை மேலும் விஸ்தரிப்பதைக் குறிப்பதாலும் குருவின் பொதுக் குணுதிசயங்களும் இதைப்போல அமைவதாலும் குருவிற்கு எண்-3 தான் சரியான எண் பெறுமானமாகக் கண்டார்கள்.

சனி பொதுவாக ஒடுக்கலை அல்லது குன்றலை அழுகலை, விருத்தியின்மையைக் குறிப்பான். எண் 8ல் இரு மூடிய முட்டைகள் ஒன்றின்மேல் ஒன்ருகக் காணப்படுகின்றன. முட்டை பொரித்து உயிரினம் வெளிவரும்போது வாழ்க்கையும் முன்னேற்றம் விருத்தி, விஸ்தரிப்பு யாவும் ஏற்படுகின்றது. மூடிய முட்டையில் வாழ்க்கை, முன்னேற்றம், விருத்தி, விஸ்தரிப்பு யாவும் ஏது? முட்டை திறந்து உயிரினம் வெளிவரும்போதுதான் வாழ்க்கையின் விருத்தி ஆரம்பமாகின்றது. முட்டை நிரந்தரமாகவே மூடியபடி இருந்துவிட்டால் அதற்குள் உயிரினம் ஏது? அழுகிய (சனி) முட்டைதான் அப்படி இருக்கும். இக்குறியீட்டின் கருத்தும் சனியின் குணுதிசயமும் ஒத்துப்போவதால் தான் சனிக்கு எண் 8 வகுத்தார்கள்.

தியானத்திற்கு சனி உதவவேண்டும். சனியின் உதவி இல்லையேல் நல்ல தியானம் கைகூடாது. எண் 8ல் ஒன்றின்மேல் ஒன்ருக முட்டைகள் ஏதோ அந்தரத்தில் நிற்பது போன்று காணப்படுகின்றது. நின்ற நிலையிலேயே கண்ணை மூடித் தியானித்து புற ஓசையசைவுகளையும், தன் அசைவுகளையும் ஒடுக்கி நிற்பதுபோன்ற எண்ணம் எண்-8 ஆல் தோன்றுகின்றதல்லவா? பிணத்தைக் குறிப்பதுவும் சனிதான். இதனுல் சனியைக் குறிக்கும் (8) இலக்கத்தை கிடைநிலையில் (∞) போட்டுப் பாருங்கள் அதுவும் பிணம்தான். எனவே சனிக்கும் குருவிற்கும் முறையே எண்கள் 8, 3 வகுத்தல் பொருத்தமானதாகும்.

— 'பவானி' - பருத்தித்துறை -

முந்திய அத்தியாயத்தில் கூறியதுபோல் எல்லா முறைகளிலும் சுக்கிரனுக்கு பெறுமான எண் 6 வகுத்திருக்கின்ருர்கள்.

பொதுவாக அழகு, இன்பம், பாடல், அலங்காரம், ஒத்துழைப்பு, கலையுள்ளம், நடனங்கள், காதல், வரவேற்புபசாரம், கவர்ச்சி, கருப்பை, விந்து, திருமணம், சுகந்தப்பொடிகள், இளமை முதலியனவைகளை சுக்கிரன் குறிப்பான். சுக்கிரன் என்னும் போது (Venus Means Six and Sex) எண் 6-ம், எதிர்ப் பாலாரிடத்தில் கவர்ச்சியும் தான் நினைவு வருகின்றது. சுக்கிரனுக்கு அளித்த எண் குறியீட்டை அவதானிக்கும்போது ஏதோ

ஒரு (கசையுடன்) சவுக்கு முளையுடன் முட்டை போல் தோன்றுகின்றது வால்வகேலிஸ் (Volvocales) எனும் குடும்பததில் கலன்கள் வாவும் குறைந்தது, இரண்டு கசையிழைகளை (Flagella) அல்லது சவுக்கு முளைகளைக் கொண்டது. இனப்பெருக்க நேரததில் சில கலன்கள் கசையிழைகளை இழந்து விடுவதுமுண்டு. இதேபோல் சுக்கிரனுக்குரிய எண் குறியீட்டிலும் ஒரு முட்டை அல்லது ஒருகலன் ஒரு கசையிழையை கொண்டதுபோலும் இனப்பெருக்கத்திற்காக கசையிழையும் வளைந்து துணையை அணைக்கத் தயாராக இருப்பது போன்றும் காட்சியளிக்கின்றது. எனவே இதன் துணையும் இதைப்போல் ஒரு முட்டை அல்லது ஒரு கலன் ஒரு கசையிழையுடன் அமைவது விசித்திரமல்ல, எனவே அதே வேளையில் இவைகளுக்குள் உருவ ஒற்றுமையும் காணப்படல் வேண்டும். ஆண் பெண் என்ற பாகுபாட்டிற்காக சிறிய வித்தியாசம் காணப்படலாம். உண்மையில் சுக்கிரனுக்குரிய எண்குறியீட்டில் கசையிழை மேலோங்கித் தாவுகின்றது. அதன் துணையின் கசையிழை கீழ்நோக்கித் தாவுகின்றது. சுருங்கக் கூறினால் இலக்கம் 6 தலைகீழாக நிற்கும்போது அதன் துணைக்குரிய இலக்கம் 9 தோன்றுகின்றது. எனவே சுக்கிரனின் துணையாகிய செவ்வாய்க்கு எண் 9 வகுததல் பொருத்தமானது.

குணாதிசயங்களில் ஒருவருக்கு ஒருவர் ஈடு கொடுப்பதாலும், குறியீட்டு உருவஒற்றுமையினாலும், எண் 6ம், எண் 9ம் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களாவதுடன் குடும்பப் பொருத்தமும் அமைகின்றது. சோதிடத்திலும் துலா இடபம் முதலிய ராசிகளுக்கு சுக்கிரன் அதிபதியாகும். இவ் இராசிகளுக்கு 7-ம் வீடு வாழ்க்கைத் துணைவரைக் குறிக்கும். உண்மையில் துலா, இடபம் முதலியவைகளுக்கு முறையே மேடம், விருச்சிகம் ஏழாம் ராசியாக அமைவதுடன் அவைகளின் அதிபதியாக செவ்வாய் அமைகிறான். இவன் துணிச்சல், வீராப்பு, முன்கோபம், சண்டித்தனம் வன்செயல் நாட்டம், கற்பழிப்பு, வற்புறுத்தல் முதலியவைகள் நிறைந்தவன். பொதுவாக இவன் எதிர்ப்பாலாரிடத்தில் இன்பம் காண்பதில் விருப்பமுடையவன். எனவே இவனின் செயல்களையும் குணங்களையும் தணிப்பதற்கு சுக்கிரனின் குணங்களும் செயல்களும் நன்கு அமைவதால் இவர்கள் வாழ்க்கைத் துணைவர்கள் ஆனார்கள். செவ்வாயைப் பணியவைத்து பரிகாரம் செய்வதற்கு சுக்கிரனால் மட்டுமே முடியும். இக்காரணத்தாற்றான் செவ்வாயால் ஏற்படும் வியாதிக்கு சுக்கிரனின் ஆதிக்கத்திலுள்ள மூலிகளால் பரிகாரம் செய்தல் வேண்டும் என்பர். இப்படியாக எண்குறியீட்டு உருவ ஒற்றுமையாலும், செயற்பாடுகளாலும், குடும்பப் பிணைப்பினாலும் சுக்கிரனும் செவ்வாயும் பிணைந்திருப்பதால் சுக்கிரனுக்கு எண் 6 வகுத்தபோது செவ்வாய்க்கு எண் 9 வகுத்தல் முறையாகும்.

குரு விருத்தியையும் முன்னேற்றத்தையும் குறிக்கும்போது புதன் படிப்படியான விருத்தியையும் முன்னேற்றத்தையும் குறிக்கும். பலதடவைகள் முயற்சிப்பதையும், முயற்சியினால் நரம்பு மண்டலங்கள் தளர்ச்சியுற்று சோர்ந்து போவதையும், புதனின் ஆதிக்கத்தில் உள்ளவரிடம் காணலாம். அடிக்கடி கேளிக்கைகளிலும், இன்ப உறவுகளிலும் ஈடுபடுவதனால் உடல் பாதிக்கப்படுவது உண்மையே. பலதடவை உற்சாகப்படுத்த வேண்டும், இல்லையேல் முயற்சியை கைவிட்டுவிடுவார்கள். சந்திரனைப்போல மனம்மாறும் குணத்தையும் இவர்களிடம் காணலாம். பொதுவாக ஆரம்பத்தில் வேகமாகச் செயல்படுவார்கள். பின்பு வேகமும் துடிப்பும் குறைந்துவிடும். சோதிடத்தில் குருவுக்குரிய தனுசு. மீனம் முதலிய ராசிகளுக்கு 7-ம் ராசிகளாக முறையே மிதுனம் கன்னி ராசிகள் அமைகின்றன. இவைகளின் அதிபதி புதனாகும். 7-ம் ராசி வாழ்க்கைத் துணைவரைக் குறிக்கும். குடும்பத்தில் விருத்தியும் முன்னேற்றமும் உண்டானால் அது ஒருவரிடத்தில் மட்டும் தனியே தங்கியிருக்க முடியாது. தம்பதிகள் இருவரிடத்தும் அது தங்கியுள்ளது. எனவே இவர்களிடத்தில் அமைப்பும் ஒத்துழைப்பும் பொதுவாகக் காணப்படும். குருவுக்கு எண்-3 வகுக்கப்படும்போது அதேபோன்று எண் குறியீட்டில் உருவ ஒற்றுமையைப் புதனிடம் எதிர்பார்த்தல் வேண்டும். பொதுவாக புதனிடம் விரயமும், தளர்ச்சியும் காணப்படுவதால் எண்-3ல் உள்ள இரு திறந்த முட்டைகளை புதனின் எண் குறியீட்டில் காண முடியாது. இதனால்தான் அதன் குறியீட்டில்(5)ஒரு திறந்த முட்டையைக் காணக் கூடியதாக இருக்கிறது. மற்ற திறந்த முட்டை விரயமாகிவிட்டது. குருவைப்போன்று புதன் அமையாமல், விருத்தியும் முன்னேற்றமும் குறைந்தபடியால் எண் குறியீட்டிலும் அது பிரதிபலிப்பதை எதிர்பார்க்கலாம். விரயத்தின் காரணமாக இதைச் சிலர் அலிக்கிரகம் என்பர். இவைகள் யாவையும் வைத்துத் தீர்மானிக்கும்போது குருவுக்கு எண் 3ம் புதனுக்கு எண் 5ம் வகுத்தல் பொருத்தமாகத் தேன்றுகிறது.

(23-ம் பக்கம் பார்க்க)

# வாழ்க்கையில் சோதிடம்

அ. திருமொழியழகன்

சோதிடம் மனித வாழ்க்கைக்கு ஓர் நல்ல வழி காட்டியா? என்றொரு வினவை எழுப்பினால் ஆம் என்றுதான் ஒவ்வொரு மனிதனும் பதிலளிப்பான்; ஆனால் எமது வழிகாட்டிகளாகத் தாய், தந்தை, குரு ஆகியோர் இயற்கையாகவே அமைந்துள்ள போது சோதிடம் எந்த வகையில் எமக்கு வழிகாட்டுகிறது? என்பதைப் பற்றி ஒவ்வொரு மனிதனும் ஆராய்ந்து பகுத்தறிய வேண்டியது அவசியம். அப்படி நாம் ஆராயப் புகுவோமேயானால் சோதிடத்தின் மகிமையை, அதன் பெருமையையே நாம் ஓரளவாவது உணர்ந்து கொள்ள முடியும்.

**சோதிடம் என்றால் என்ன?**

சோதிடம் அநாதியானது. இறைவனுடைய அருள் வாக்காகிய நான்கு வேதங்களையும், அவற்றை நாம் கற்று, உணர்ந்து தெளியத் துணையாக உள்ள உப நூல்களையும் இறைவன் தாமாகவும், தனது அருட்பேறு பெற்ற அவதார புருடர்கள் மூலமாகவும் ஆக்கி அருளினர். அநாதியான வேதங்களுக்கு அங்கங்களாக அமைந்துள்ளன பல. அவையாவன:- சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்பனவாம். வேதபோதங்களின் அஸ்திவாரத்தின் மீதே இந்து தத்துவ வேதங்களும், சனாதன இந்துசமய கோட்பாடுகளும், சம்பிரதாயங்களும் சோதிட சாஸ்திரமும் தோன்றின. இச் சோதிட சாஸ்திரக் கலையே இன்று எமது நல்வாழ்வுக்கு ஓர் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

**சோதிட சாஸ்திரத்தின் பகுதிகள் எவை?**

சோதிடம் மண்ணுலக மனித வாழ்வுக்கு ஆதாரமாக வருடம், அயனம், இருது, மாதம், திகதி, வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் முதலான காலங்களைக் கணித மூலம் காண்பிக்கும் ஒரு கணிதப் பகுதியாகும். அவ்வக் காலங்களில் தோன்றும் ஒவ்வொரு மனிதப் பிறவியினுடைய சற்குணம், நற்குணம், ஆயுள், தனம், வாக்கு, மனம், இன்பம், துன்பம், தொழில், வசதி, இலாபம் போன்ற இன்னோரன்ன வாழ்க்கைக் கால நிலை எவ்வண்ணம் அமையும் என்பதை அளந்து தத்ரூபமாகக் காட்ட வல்லது சோதிடம். இது ஜாதகப் பகுதியாகவும் நல்லவை செய்வதற்குகந்த முகூர்த்தப் பகுதியாகவும், இன்னும் பல பகுதிகளாகவும் விரிந்து, பரந்து காலத்தை வரையறுத்துக் காண்பிக்கிறது.

**சோதிடம் எப்படி வழி காட்டுகிறது?**

ஒருவர் மண்ணில் பிறக்கும்போது பன்னிரு இராசிகளும் நிற்கும் கோள்களின் கதியிலேயே அவர் வாழ்க்கை அமையும். இராசிகளில் நிற்கும் கோள்களின் ஆதிக்கத்தைக் கொண்டே அவரின் திறமை, ஏற்ற தொழில் ஆதியாம் வாழ்க்கைக்கான வழிகளைச் சோதிடம் கூறும். என்ன கோள்களின் மகாதெசா புத்தி காலத்தில் அவர் வாழ்வில் என்ன விதமான சம்பவம் நிகழும் என்பதை தெளிவாக விளக்கிக் கூறுவது சோதிடம். மனித வாழ்வில் பின் நிகழக்கூடிய சம்பவங்களை முன் கூட்டியே எடுத்துக் கூறுவதும் அதன் மூலம் நல்லவை, கெட்டவையைப் பகுத்துணர்ந்து நல்ல வழியில் எம்மை வழிநடத்திச் செல்லும் வழிகாட்டியாக சோதிடம் அமைந்துள்ளது.

**உதாரணம்.**

பரந்த சமுத்திரத்தில் செல்லும் கப்பல்களுக்கு வானில் ஊரும் வானூர்திகளுக்கு மழையறி கருவி, புயலறி கருவி, திசையறி கருவி போன்றவை மாலுமிகளுக்கும், விமானிகளுக்கும் வழிகாட்டிகள். இவை நவீன சாதனங்களாக அமைந்துள்ளன. இவை கடலிலோ, வானிலோ ஏற்படப் போகும் பெருமழை, இடி, புயல் போன்ற தீய சக்திகளை முன் கூட்டியே மாலுமிகளுக்கு அறிவித்து விடும். அதன் எச்சரிக்கையையும் தமது, ஆற்றல், புத்தி சாதுரியத்தைக் கொண்டும் மாலுமிகள் நல்வழியில் செலுத்திச் செல்வார்கள். அபாயமின்றித் தமது பயணத்தைத் தொடருகிறார்கள்.

**சோதிடம் எப்படி வழிகாட்டியாகிறது?**

மனிதப் பிறவியினருடைய வாழ்க்கைப் படகும், வாழ்க்கை எனும் கடலில் ஆடியாடிச் செல்கிறது. அதற்கு சோதிடம் ஒரு நல்ல வழிகாட்டி

யாக நின்று வழிகாட்டி வருகிறது. அது ஜாதகப் பகுதியில் வைத்து, கணித சுத்தமாகக் கணித்துப் பார்ப்பதின் மூலம் ஆண்கள் தமக்குப் பொருத்தமான ஒரு இல்லாளைத் தேடிக் கொள்ளவும், பெண்கள் பொருத்தமான நாயகரைத் தேடிக் கொள்ளவும், பொருளீட்டல் மேலும் தந்தை, தாய், பிள்ளைகள், சகோதரர்கள், சுற்றத்தார், அந்நியர், அரசர் இவர்களில் யார் எமக்குப் பொருத்தமுடையவர் என்பதைப் பகுத்தறிய பூமி, வீடு, வாகனம் கொள்வனவு செய்யப் பொருத்தமானவை, பிறதேச பிரயாணம் எத்திசை செல்வது பொருத்தம் என்பதைப் பகுத்தறிய, எந்தவகை உத்தியோகம், எத்துறையில் எப்படியான தொழில் பொருத்தம் என்பதையும், முதலாளிகள் தமக்குப் பொருத்தமான தொழிலாளரைத் தேர்ந்தெடுக்க, தொழிலாளிகள் தமக்குப் பொருத்தமான முதலாளிகளைத் தேர்ந்து வேலைதேட சோதிடம் வழிகாட்டுகிறது.

**சோதிடத்தை வகுத்துத் தந்தவர் யார்?**

இறைவன் அருள் கொண்டு சூரியன், பிரமன், வியாசர், வசிட்டர், அத்திரி, பராசரர், காசிபர், நாரதர், கார்க்கியர் மரீசி, ஆங்கிரசர், மநு, உரோமர், பௌருகுத்சர், யவனச்சாரியர் பிருகு, பைலர் போன்ற மகான்களும் இன்னும் பலருமாகும். இச் சோதிட சாஸ்திரத்தை மட்டுமன்றி மந்திரம், மருத்துவம் போன்றவற்றையும் எமக்கு ஆக்கித் தந்துள்ளனர். அவர்கள் தந்தருளிய இந்த அருமறை வழிவந்த சோதிடப் பொக்கிஷத்தைப் பேணிக் காத்து, வளர்த்து எமது பிற்சந்ததியினருக்கும் விட்டுப் போக வேண்டிய எமதுற்றவரின் தலையாய கடமைகளாகும். இச் சோதிட சாஸ்திரத்திற்கு சாதி, மத, மொழி, நாடு பேதங்கள் எதுவும் கிடையாது. இன்று தமிழர் மட்டுமல்ல; சிங்களவர், மேலைத் தேசத்தவரான அமெரிக்கர் ஆங்கிலேயர் (ஐரோப்பியர்) ருஷியர் ஆகியோருமே விஞ்ஞானத்துடன் இணைத்து பயன் படுத்தி வருகிறார்கள்.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது ஔவை மூதாட்டியின் பொன்மொழி. இப் பொன் மொழியில் 'எண்' என்ற பதத்திற்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. எண் பதன் பதம் கணிதம் என்பதாகும். எனவே எமது வாழ்க்கையில் முதலிடம் பெறுவது கணிதம்தான் சாதாரணமாக ஒரு நோயாளியைப் பரிசோதிப்பது முதல், ஒரு பிள்ளையை வளர்ப்பது வரை உணவு கொடுப்பது கூட மணி நிமிட செக்கன் என்ற கணிதத்தின் அடிப்படையிலேயே நடைபெறுவதை நாம் கண்கூடாகக் காணமுடியும். சோதிடமும் சுத்தமான கணித கணிப்பினைக் கொண்டே சோதிட சாஸ்திரக் கலையின் உண்மையான தத்ரூபமான பெறுபேறுகளை நாம் காண முடியும். இந்த அடிப்படையிலேயே எமது வாழ்வில் கணிதம் சகல அம்சங்களிலும் வியாபித்துள்ளதைக் காணலாம். சட்டத்தில் கணிதம், சாஸ்திரத்தில் கணிதம், சுகாதாரத்தில் கணிதம், சமயத்தில் கணிதம், உணவில் கணிதம், விஞ்ஞானத்தில் கணிதம், இந்த உலகம் வியாபித்த உண்மையை அறிந்தும் கூட நாம் கணிதத்தைப் புறக்கணித்து வாழமுடியுமா? அதுவும் சோதிடக் கலையில் கணிதம் தப்பினால் அது உண்மைப் பலனைக் கொடுக்க முடியாது. ஆகவே எமது எதிர்காலச் சமுதாயமும் கணிதத்தை அடிப்படையாகக் கொண்டு கணித சுத்தியாக சோதிடக் கலையில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்வது எனது கடமையாகும்.

# மணப்பந்தல்

| | | | |
|---|---|---|---|
| குரு | | | யுரே |
| ராகு | கிரக நிலை | | புளு |
| | | | கேது |
| லக் சந் புத | சூரி | | செ சுக் சனி நெப் |

ஜாதகம் இல .69

பெண் ~~ஆண்~~

பிறந்த திகதி:
1951-12-01
காலை மணி 7-55

நட்சத்திரம்:
பூராடம் 1-ம் கால்

சைவ வேளாண் மரபைச் சேர்ந்த க.பொ.த: பரீட்சையில் சித்திபெற்ற அழகும், நற்குண நல்லொழுக்கப் பண்பும் நிறைந்த இப்பெண்ணுக்கு இலங்கை அல்லது வெளிநாட்டில் சொந்த வியாபாரம்/அரசாங்க/தனியார் உத்தியோகத்திலுள்ள இதே மரபைச் சேர்ந்த 35-45 வயதுடைய மணமகன் தேவை. தகுதிக்கேற்பச் சன்மானங்களுடன் வீடு-வயல்-தோட்டம்-நகை-ரொக்கமும் சீதனம் வழங்கப்படும்.

தொடர்பு:- 'மணப்பந்தல்' சோதிடமலர்
மட்டுவில்—சாவகச்சேரி

# மேட லக்கின ஆணும் கடக லக்கின பெண்ணும் சேர்வது நன்மையானதா?

வே. சின்னத்துரை — நல்லூர்

இம்மனிதனிலும் பார்க்க துப்பரவாகவே வித்தியாசமான வேறுபட்ட இப்பெண் மணி அவனுக்குரிய தனிப்பட்ட பிரபலத்திலும், ஓர்மத்திலும், திடத்திலும் மயங்கி அவள் என்ன நடந்தது என்று அறியமுன் அவனால் லயிக்கப்படுவாள். மிக ஆழமாக அவனுடன் ஈடுபாடு கொள்வாள் ஆனால் அதிசீக்கிரம் வாழ்க்கையின் பெறுமதிகள் எவ்வளவு வித்தியாசமென்பதனை அவள் அவதானிப்பாள். அவன் புதியபுதிய நோக்கங்கள் தொழில் முறைகளைத் தேடுவான். அவளோ சாந்தமான அமைதியான வாழ்வைத் தேடுவாள். அவனுடைய காதலும் அன்பும் மிகவும் வேகமாக தொழிற்படுவது போல் அவளுக்குத் தோன்றும். ஆனால் இந்த வேகம் எவ்வளவு காலம் நின்று பிடிக்கும் என்பதில் அவள் ஐயம் கொள்வாள். கொஞ்ச காலம் செல்லத்தான் ஆசையால் குருடனாகி விட்டானென்ற உணர்ச்சி அவனுக்குத் தோன்றி அவள் அந்த வேகத்திற்கு நின்று பிடிக்கிறாளில்லை என்று உணர்வான். அந்த உணர்வில் அவன் அமைதியற்றவனாவான். பெண்களின் மன நிலையை அவனால் விளங்கிக்கொள்ள முடியாது. விளங்கிக் கொள்ளவும் அவன் எத்தனிக்க மாட்டான்; காதல் என்பது தனக்கு எப்படி என்பதையும் அதே காதல் அவனுக்கு நேர்மாறுபாடாயிருப்பதாயும் அவள் ஓர் முடிவுக்குவருவாள்.

இக்கூட்டுறவு வெற்றிபெற வேண்டுமென்றால் அவள் அடக்கமாக அமைதியைப் பேண வேண்டும். அத்துடன் பரந்த மனப்பான்மையுடனிருக்க வேண்டும்; அவனும் நான் முதலில் என்ற அகங்காரத்தை ஒழித்து அவனுடைய உணர்ச்சிகளுக்கு இடமளிக்க வேண்டும்.

அவளுடைய கற்பனைக் காதல் அணுகுமுறை இந்த மனிதனால் அவமதிக்கப்படும். ஏனெனில் இவ்விதமான குணதிசயங்கள் இம்மனிதனுக்கு அன்னியமானது. அவனுடைய காதல் ஆக்கிரமிப்புக் காதலாகும். படுக்கையறைக்கு வெளியே உள்ள பிகுத்தன்மை அவர்களுடைய பாலியல் வாழ்வை ஊடுருவுமானால் அவனுடைய காதல் கொடுவினைக் காதலாக உருமாறும். இது அவளைப் பயப்படுத்தி அஞ்சவைக்கும்.

ஒருவர் சிக்கலானவராகவவும் மற்றவர் நேரானவராகவும் இருப்பின் ஒற்றுமை காண்பது கடினம் தான்.

# இலங்கை சோதிட ஆய்வுமன்றம்

மேற்படி மன்றத்தின் 1987-ம் ஆண்டு மாசி மாதக் கூட்டம் 22-2-87 நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் காலை 10-00 மணியளவில் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் ஆரம்பமானது. சென்ற கூட்ட அறிக்கையும் பொருளாளர் அறிக்கையும் வாசிக்கப்பட்டு சரியென ஏற்றுத் தலைவரால் கைச்சாத்திடப்பட்டது.

பின்னர் திரு. வே. சின்னத்துரை அவர்களால் மறுபிறப்பு என்னும் ஆய்வுக் கட்டுரை வாசிக்கப்பட்டது. அவர் மறுபிறப்பு எப்படி சாதக ரீதியில் அமைகிறது. என்பதைப் பல்வேறு உதாரணச் சாதகங்கள் மூலம் விபரமாகக் கூறினர். பின்னர் கலந்துரையாடயில் இது தொடர்பாக அங்கத்தவர்கள் பலர், தத்தம் கருத்துக்களை விளக்கினர். அதன் பின்னர் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

(20-ம் பக்கத்தொடர்ச்சி)

அடிப்படை எண்களை வைத்து ஆராய்ந்த போது அவைகள் யாவும் கிரகங்களின் முக்கிய குணதிசயங்களை வெளிப்படுத்துவதனால் சோதிடத்தில் கிரகங்கள் முக்கியத்துவம் வகிப்பதுபோன்று எண் சோதிடத்தினில் எண்கள் முக்கியத்துவம் வகிக்கின்றன.

எமது விருப்பு, வெறுப்பு, அச்சம், ஆத்திரம் ஆசை, அன்பு யாவும் நாமாகவே விருப்பம்போல் உண்டாக்கிக்கொள்ள முடியாது. இவ்வுணர்ச்சிகள் யாவும் எமது உள்ளத்தினில் தாமாகவே எழுகின்றன. இவ்வுணர்ச்சிகளின் எழுச்சிக்குக் காரணம் என்ன? நம் பூமியைச் சுற்றி இருக்கும் கிரகங்கள் தான்.

நமது பூமி மட்டுமல்ல உலகப் பரப்பின் மேலுள்ள கடல்நீர் சந்திரனின் ஈர்ப்பு சக்தியால் அலைகளாக எழுகின்றது. இதேபோல் தான் நமது மூளையிலும் கிரகங்களின், முக்கியமாக சந்திரனின் ஈர்ப்பு சக்தியால் சிந்தனை அலைகள் எழுகின்றன; கதிரவன் ஈர்ப்பு சக்திக்கும் இதிற்பங்குண்டு.

(வளரும்)




சென்ற காலமும்,

இனி வருங்காலமும்,

மில்க்வைற் தொழிலகம்

இன்றுவரை செய்துவந்த சேவைகளின் பழுதிலாச் சிறப்புக்கு உங்கள் அமோக ஆதரவே காரணமாகும். அதுபோல் இனிவருங் காலத்துப் பெருஞ் சேவைக்கும் உங்கள் ஆதரவு எங்களுக்குத் தேவை. நீங்கள் இது வரை கொடுத்துவந்த நல்லாதரவிற்கு நன்றி.

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

கடந்த 9 ஆண்டுகளாகத் தாங்கள் 'சோதிட மலருக்கு' நல்கிவரும் ஆதரவிற்கு நன்றி. எதிர்வரும் பிரபவ புத்தாண்டில் 10-வது ஆண்டு மலர் பலவித சிறப்பம்சங்களுடன் வெளிவரவுள்ளது.

சந்தாதாரர்கள் 10-வது மலருக்கான சந்தாத் தொகையை 1-4-87 க்கு முன் செலுத்தி தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | வருட சந்தா | ரூ 42-00 |
| | வெளிநாட்டுக்கு (கப்பல் வழி) | வருட சந்தா | ,, 78-00 |
| | மலேசியா (விமான வழி) | வருட சந்தா | ,, 180-00 |
| | இங்கிலாந்து (விமானவழி) | வருட சந்தா | ,, 225-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.


விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

# பிரபவ வருட

# திருக்கணித பஞ்சாங்கம்

(1987 — 88)

100-வது ஆண்டு வெளியீடாக
பல விஷயங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

* சாஸ்திரங்களிற் கூறியபடி சுத்தமாகக் கணிக்கப்படுவதும்
* கிரகங்களின் நிலைகளைச் சரிவரக் காட்டுவதும்
* காட்சிக்கும் பலனுக்கும் சரிவருவதும்
* அறிஞர்களின் அமோக ஆதரவைப் பெற்று சோதிட உலகின் திசை காட்டியாக விளங்குவதும்

## திருக்கணித பஞ்சாங்கம் மட்டுமே!

*

விலை ரூபா: **18-00** (தபாற் செலவு வேறு)
வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு உண்டு

விபரங்களுக்கு:

## திருக்கணித நிலையம்

மட்டுவில், சாவகச்சேரி,


Edited by K. Sathasiva Sarma, Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka Phone: 280